பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை (25-08-2002)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:271

## தாய்லாந்தில் 16ஆம் திகதி ஆரம்பிக்க இருக்கும்

# பேச்சு குறித்து விளக்கமளிக்க

# மொறகொட இந்தியா பயணம்!

## புலிகள் மீதான தடைநீக்கம் தொடர்பாகவும் பேசுவார்

கொழும்பு,ஓகஸ்ட்25

**தாய்லாந்தில் எதிர்வரும்16ஆம் திகதி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பமாகவிருக்கும் நேரடிப் பேச்சுக்கள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு விளக்க பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று இந்தியாவுக்குப் பயணமானார்.**

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா உட்பட முக்கிய இந்தியத் தலைவர்களை அவர் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நேரடிப் பேச்சுக்கள் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகும் என நோர்வே உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இந்தப் பேச்சுக்களில் கலந்துரையாடப்படவிருக்கும் விடயங்கள் -

பேச்சு ஆரம்பிக்க முன்னர் புலிகள் மதான தடையை நீக்கும் முடிவு -

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை 6ஆம் திகதி நீக்கப்படும்

### அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.25

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை எதிர்வரும் 6 ஆம் திகதி நீக்கப்படும் என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்குத் தெரிவித்தார்.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள அரசு - புலிகள் நேரடிப் பேச்சுகளுக்கு முன்னோடியாக - விடுதலைப் புலிகள் இந்தப் பேச்சுக்களில் சுதந்திரமாகப் பங்குபற்ற வசதியாக - அவர்கள் மீதான தடை நீக்கப்படவிருக்கின்றது என்றும் -

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளிவரும் என்றும் - அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் 10 தினங்களில் புலிகள் மீதான தடை நீக்கப்படும் என அரசு அறிவித்திருந்தது தெரிந்ததே.

(ம-3)

## தடையை நீக்குவதால் நாட்டுக்குப் பாதிப்பில்லை

### மல்வத்த பீடாதிபதிக்கு அமைச்சர் மாரப்பன விளக்கம்

கொழும்பு,ஓக.25

இன்றுள்ள அமைதியான சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் மீதான தடை அவசியமற்றது. அத்தடையை நீக்குவதால் நாட்டுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படப்போவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மல்வத்த பீடாதிபதியிடம் நேற்றுத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டிய தேவை குறித்து விளக்குவதற்காக திலக் மாரப்பன நேற்றுப் பீடாதிபதியைச் சந்தித்தார்.

"புலிகள் மீது தடை விதிக்க வேண்டிய காலம் ஒன்று இருந்தது. இன்று நிலைமை மாறிவிட்டது. அவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் மூடப்பட்டிருந்த பலாலி வீதிப்பகுதி திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.25

ஆரியகுளம் சந்தியையும் ஆஸ்பத்திரி வீதியையும் இணைக்கும் பலாலி வீதிப்பகுதி பொது மக்கள் பாவனைக்கு இன்று திறக்கப்படுகின்றது என்று பலாலிப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இந்தப்பாதையூடாக பாடசாலை மாணவர்கள் செலவதற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டதாகவும் -

இன்றுமுதல் பொதுமக்கள் செலவும் அனுமதி அளிக்கப்படும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

நகரப்பகுதியில் ஏற்படும் சன நெரிசலைத் தவிர்க்கும் வகையில் இந்தப் பாதையைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறக்க வேண்டும் என்று கோரி பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடந்த வாரம் ஆரியகுளம் சந்தியிலும் ஆஸ்பத்திரி வீதிச் சந்தியிலும் மறியற் போராட்டம் மேற்கொண்டமை தெரிந்ததே.

(ம-3)

## வெடிபொருள் வெடித்து சிறுமி பலி!

விஸ்வமடு, திருமந்தன்ஆறு என்னும் இடத்தில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு தவறுதலாக வெடிபொருள் ஒன்று வெடித்ததில் எட்டுவயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்; இரு சிறுவர்கள் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட வெடிபொருள் ஒன்றை இந்தச் சிறுவர்கள் எடுத்துவந்ததாகவும் -

அந்த வெடிபொருளை வீட்டு முற்றத்தில் வைத்துத் தீயிட்டுக் கொளுத்தியதாகவும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

### கடற்போக்குவரத்திலுள்ள சிக்கல்கள் குறித்து

## கண்காணிப்புக் குழுத் தலைவர் கிளிநொச்சியில் நேற்று பேச்சு

கிளிநொச்சி,ஓக.25

வன்னிக்கும் கிழக்குக்கும் இடையில் விடுதலைப் புலிகள் பயணம் மேற்கொள்ள இணக்கம் காணப்பட்ட கடற்போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்து விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்து விரிவாக ஆராய்ந்தனர்.

கடற் போக்குவரத்துத் தொடர்பாக இணக்கம் ஏற்பட்டு வன்னிக்கும் கிழக்குக்கும் இடையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பயணம் மேற்கொண்டனர்.

கடற்கரையில் இருந்து 10 கடல் மையில் தூரத்தில் புலிகளின் படகுகள் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று இணக்கம் காணப்பட்ட போதும் -

புலிகளின் படகுகள் கரையில் இருந்து ஒரு கடல்மைல் தூரத்தில் செல்வதாகவும் இது ஒரு யுத்த மீறல் என்றும் - கடற்படையினர் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டிருந்தனர்.

இந்த நிலையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று கிளிநொச்சிக்கு வந்து புலிகளுடன் பேசினர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொனட் புருகோவ்டே தலைமையில் வந்த குழுவில் கடற்கண்காணிப்புக்குப் பொறுப்பான கார்மோ கபிலாவும் இடம்பெற்றிருந்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை,ஓக.25

கடந்த 20ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற கலவரத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருபது சிங்கள இளைஞர்களையும் விடுவிக்குமாறு கோரி நேற்று திருகோணமலை நகரில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நகரில் கடைகள் மூடப்பட்டன; இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

திருகோணமலை, மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் நூற்றுக்கணக்கானவர்கள் திரண்டு இந்த ஆர்ப்பாட்டத்

(12ஆம் பக்கம் பார்க்க)


### சாவகச்சேரி கல்வயல் பகுதியில்

## வீட்டு வளவில் உள்ள பங்கரில் மண்டையோடுகள் கண்டுபிடிப்பு!

### இராணுவச் சீருடையும் காணப்படுகிறது

சாவகச்சேரி,ஓக.25

சாவகச்சேரி கல்வயல் சித்தமாவடிப்பிள்ளையார் ஆலய வீதியில் வீட்டு வளவுக்குள் உள்ள பங்கர் ஒன்றினுள் மண்டையோடுகள், இராணுவச் சீருடைகள், சப்பாத்துகள் ஆகியன காணப்படுகின்றன.



பற்றைகள் மூடப்பட்ட நிலையில் உள்ள பங்கருக்குள் மண்டையோடுகள் இரண்டும் சிதைந்த நிலையில் எலும்புகளும் காணப்படுகின்றன.

கறுப்புநிறச் சப்பாத்து, கறுப்புநிறக் காற்சட்டை, இராணுவச்சீருடை, பெண்கள் ஆடைகளுக்கு தைக்கும் லேஸ்துணி ஆகியனவும் அங்கு காணப்படுகின்றன.

இந்தப் பங்கருக்கு அருகிலுள்ள வீடு பலத்த சேமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் விறகு வெட்டச் சென்றவர்களே இந்த மண்டையோடுகளைக் கண்டுள்ளனர். இந்தப் பகுதி படையினரால் பரிசோதிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-3-31)

## குடாநாட்டுக்கு அடுத்த மாதத்தில் 1,200 தொலைபேசி இணைப்புகள்

### புதிதாக வழங்கப்படும் என்கிறார் ரெலிகொம் அதிகாரி

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்நகர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கு அடுத்த மாதத்தில் ஆயிரத்து 200 புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவிருக்கின்றன.

ரெலிகொம நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு பொது முகாமையாளர் எஸ்.கனகசூரியர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் உள்ள பரிவர்த்தனை நிலையத்தில் புதிய 'எக்சேஞ்'இணைப்புக்கள் எதிர்வரும் 7ஆம் திகதியளவில் பொருத்தப்படவிருக்கின்றன. இந்த 'எக்சேஞ்' மூலம் ஆயிரத்து 200 பேருக்கு புதிய இணைப்புக்கள் வழங்கப்படவிருக்கின்றன.

யாழ்.ஸ்ரான்லி வீதி ஊடாக, கே.கே.எஸ். வீதியில் தாவடிவரையுள்ள பகுதியில் 400 இணைப்புக்களும் -

பலாலி வீதியில் உரும்பிராய் வரை உள்ள பகுதியில் 400 இணைப்புக்களும் -

பருத்தித்துறை வீதியில் நல்லூர்,

(12ஆம் பக்கம் பார்க்க)

### சுண்டுக்குழி பகுதி வீட்டில்

## தனித்து வாழ்ந்த பெண் மர்மமான முறையில் சாவு!

யாழ்ப்பாணம்,ஓக.25

சுண்டுக்குழி, விதானையார் வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து மிகவும் பழுதடைந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது. சடலத்தின் பல இடங்களில் காயங்கள் காணப்படுகின்றன.

யாழ்.கல்வித்திணைக்களத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## 17 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்:

# யாழ். மாவட்ட வீரர்கள் ஐவர் மாகாண அணிக்குத் தெரிவு!

வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்களில் 17 வயது அணிகளுக்கிடையில் மாத்தளையில் நடந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்ட அணியின் ஐந்து வீரர்கள் வடக்கு - கிழக்கு மாகாண அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், ஆகிய மாவட்டங்களின் அணிகளுக்கிடையிலான ஆட்டங்கள் மாத்தளையில் இடம்பெற்றன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றிய வீரர்களில் இருந்து வடக்கு - கிழக்கு மாகாண அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அணியில் இருந்து எச்.கிருஷ்ணசந்திரா, ரி.மதனராஜா, எஸ்.மாசுதன், கே.றொஹான், ஜி.செல்வின் லொயிட் ஆகியோர் மாகாண அணிக்குத் தெரிவாகியுள்ளனர்.(ம-3)

# ஐ.சி.சி. ஒப்பந்தத்துக்கு ஆஸி.வீரர்கள் சம்மதம்

ஐ.சி.சி.சம்பியன் போட்டிகளுக்கான வர்த்தக உரிமை ஒப்பந்தத்தில் கைபெழுத்திடுவதற்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். ஆஸி. கிரிக்கெட் சபைக்கும் ஆஸி.கிரிக்கெட் வீரர்கள் சங்கத்திற்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன.

இப்பேச்சுக்களையடுத்து நேற்று முன்தினம் வீரர்கள் தமது இணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து செப்ரெம்பர் 12ஆம் திகதிமுதல் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கு முழுப்பலத்துடன் களமிறங்கப் போவதாக ஆஸி.கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை -

ஆஸ்திரேலியாவைப் பின்பற்றி இங்கிலாந்து, தென்னாபிரிக்க வீரர்களும் ஐ.சி.சி.ஒப்பந்தத்தில் கைபெழுத்திடுவதற்கு விரைவில் இணங்கக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

"இணக்கப்பாடொன்றை நெருங்குகிறோம்" என இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களின் சங்கத்தின் நிர்வாக இயக்குநர் ரிச்சவர் பெவன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

ஆனால், அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகளைப் பொறுத்தவரை இப்பிரச்சினை தொடர்ந்து நீடிக்கிறது என ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

தமது வீரர்களுடன் பேச்சு தொடர்கிறது என தென்னாபிரிக்காவின் ஐக்கிய கிரிக்கெட் சபை கூறுகிறது. எனினும் ஆஸி, இங்கிலாந்து வீரர்கள் சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

தென்னாபிரிக்க வீரர்களும் இச்சம்மேளனத்தில் தொடர்பு கொண்டுள்ளனர். எனவே இவர்கள் ஒரேவிதமான தீர்மானத்திற்கு வரலாம் எனக் கருதப்படுகிறது. இந்தியா இச்சம்மேளனத்தில் அங்கம் வகிக்கவில்லை. (ம)

## ஐ.சி.சி.சம்பியன் கிண்ணக் கிரிக்கெட்

# இந்திய அணிக்கு ரொபின் சிங் தலைவர்?

அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன் சுற்றுப் போட்டிக்கான இந்திய அணிக்கு சகலதுறை வீரர் ரொபின் சிங் தலைவராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போட்டிகளுக்காக 25 பேர் கொண்ட குழாமை இந்தியா தெரிவு செய்துள்ளது. இவர்களில் 13 பேர் ஐ.சி.சி. போட்டியில் பங்குபற்றுவதற்கு ஏற்கனவே வாய்மூல சம்மதம் தெரிவித்துள்ளனர். தமிழக வீரர்களான ரொபின் சிங், சடகோபன் ரமேஷ், ஹேமங் பதானி, எல்.பாலாஜி மற்றும் ஸ்ரீநாத், வெங்கடேஷ் பிரசாத், காம்பிர ஷரந்திப் சிங், தாஸ்குப்தா, ரோஹன கவாஸ்கர், மொஹந்தி, எம்.எஸ்.கே. பிரசாத், மனோஹர் ஆகியோரே இதுவரை வாய்மூல சம்மதம் தெரிவித்துள்ளவர்களாவர்.

சம்பந்தப்பட்ட மாநில கிரிக்கெட் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்ட வீரர்களின் சம்மதத்தைப் உறுதிப்படுத்தும்படி கோரப்பட்டுள்ளன. வீரர்களின் சம்மதம் கிடைத்த பின்னரே அவர்களுக்கு ஒப்பந்தப் பத்திரம் அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 25 பேர் கொண்ட குழாம் சில நாள்களின் பின்னர் 14 பேர் கொண்ட அணியாக மாற்றப்படும்.

இதேவேளை - சிரேஷ்ட வீரர்களுக்கான கதவுகள் மூடப்படவில்லை. அவர்கள் கைபொப்பமிட விரும்பினால் அது குறித்து பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.25

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே.எவி.ஸி.எவி. வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணிமுதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கழகத்தின் லண்டன் கிளைத் தலைவர் ஏ.அருணகுமாரும் சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பி.கமலநாதனும் கலந்துகொள்வர்.

இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும் கேஎவி.எவி.எவி. அணியும் மோதுகின்றன. (ம-3-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.25

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் 'செற் அப்', 'ஓவர் கேம்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ இரவு 8 மணி - கே.கே.எஸ். வி.க. எதிர் கோப்பாய் ஐக்கிய வி.க. (செற்.அப்)

★ இரவு 8 மணி - தீவகம் காந்திஜீ வி.க. எதிர் தொண்டமானாறு விவேகானந்தா வி.க.(ஓவர்கேம்)

★ இரவு 8.30மணி - சாவற்காடு மகாத்மா வி.க. எதிர் வரணி இளைஞர் வி.க.(ஓவர் கேம்). (ம-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அரியாலை காந்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் காரைக்காடு உதயசூரியன் விளையாட்டுக்கழகமும், இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன. (ம-ரி-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.25

புத்தூர் கிழக்கு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் கிழக்கு சவாரித்திடலில் நடைபெறவுள்ளது (ம-ரி)

## தென்மராட்சி தெற்குப் பகுதியில்

# விவசாயம் செய்ய அனுமதிக்க ஐந்து நாள்கள் கால அவகாசம்

## மறியற்போருக்கும் ஆயத்தம்

தென்மராட்சி,ஓக.25

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் நெற்செய்கை நடவடிக்கைக்கு படையினர் இன்னும் அனுமதியளிக்காததைக் கண்டித்து செப்ரெம்பர் முதல் வாரத்தில் பிரதேச செயலகம் முன்பாக மறியற்போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தினர் பிரதேச செயலருக்கு முன்னறிவித்தல் கடிதம் வழங்கியுள்ளனர்.

கடந்த மாதம் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி, நுணாவில் ஆகியவை உட்பட தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் குறிப்பிட்ட இடங்களில் நெற்செய்கையை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தனர். ஆயினும் மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நெல்வயல்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இன்னமும் படையினர் அனுமதிக்கவில்லை.

இந்நிலையில் விவசாயிகள் எதிர்வரும் 30ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கி இக்காலப்பகுதிக்குள் விவசாயம் செய்ய அனுமதி கிடைக்காதுவிட்டால் செப்ரெம்பர் முதல் வாரத்தில் பிரதேச செயலகம் முன்பாக மறியற்போராட்டம் நடத்தவுள்ளதாக அந்த முன்னறிவித்தல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மறவன்புலோ விவசாயிகள் சம்மேளனத்தினர் தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்குமாறு பிரதமருக்கு அனுப்பிய கடிதத்திற்கு பதில்கோரி பிரதமர் அலுவலகத்தினால் நீதி மற்றும் சட்ட வலுவாக்கல் அமைச்சு, புனர்வாழ்வு மீள்குடியமர்வு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

## மாணவர் ஒன்றிய அவசர கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ். மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் அவசர கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

குடாநாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளினதும் உயர்தர மாணவர் ஒன்றியங்களின் உறுப்பினர்களை இந்தக் கூட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## விவசாயிகள் கலந்துரையாடல்

சண்டிலிப்பாய்,ஓக.25

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நடத்தும் காலபோக நெற்செய்கை பற்றிய விவசாயிகளுடனான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கட்டுடையிலுள்ள சம்மேளன அலுவலகத்தில் நடைபெறும்.

சமமேளனத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் உடுவில் கமநல சேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமரன் உட்பட பலர் கலந்துகொள்வார்கள்.

விதைநெல் கொள்வனவு, கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல், நெற்பயிர்க் காப்புறுதி செய்தல் ஆகிய பல்வேறு விடயங்கள் பற்றி இக்கலந்துரையாடலில் ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-135)

# பண்டாரவன்னியனின் வெற்றிவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.25

வன்னியின் இறுதித் தமிழ் மன்னனான மாவீரன் பண்டாரவன்னியனின் வெற்றிவிழா நிகழ்வுகள் இன்று பிறபகல் 3மணிக்கு கற்சிலைமடுவில் நடைபெறவுள்ளன.

கற்சிலைமடு, கற்பொறிப்படியிலிருந்து மாவீரன் பண்டாரவன்னியனின் உருவப்படம் மங்கள வாத்தியங்கள் சகிதம் மரியாதை அணிவகுப்புடன் கற்சிலைமடு பிரதான வீதியில் புதிதாக உருவாக்கப்பட்ட உருவச்சிலை அமைந்துள்ள இடத்திற்கு எடுத்துவரப்படும்.

அதனைத் தொடர்ந்து பொதுச்சுடரேற்றல், தமிழீழத் தேசிய கொடியேற்றல், பண்டாரவன்னியன் கொடியேற்றல், உருவச்சிலை திரைநீக்கம் மற்றும் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தல், மலர் வணக்கம் என்பன இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு புதிதாக உருவாக்கப்பட்ட உருவச்சிலை வளாகத்தில் பொதுச்சுடரேற்றல், அகவணக்கம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றைத் தொடர்ந்து சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகளும், கௌரவிப்பு, பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (ம-10)

## இளம்பெண்ணின் மரணத்தில் சந்தேகம்

# மேலதிக பிரேத பரிசோதனைக்காக சடலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.25

அண்மையில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவித்து யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த இளம்பெண்ணின் சடலம் மேலதிக பிரேத பரிசோதனைக்காக நேற்று கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

அடித்துக் கொலைசெய்யப்பட்ட பின்பே அவரது கழுத்தில் சுருக்கு மாட்டப்பட்டிருக்கலாம் என்றும் -

இவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் -

யாழ்.ஆஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்திருந்தார். இதனையடுத்தே சடலம் மேலதிக பரிசோதனைக்காக கொழும்பு தலைமைச் சட்ட வைத்திய அதிகாரி பணியகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணின் சடலத்தை நேற்றுப் பொறுப்பேற்ற படையினர் அதனை விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்புவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஸ்ரீ ஜெயராணி(வயது 33) என்பவரின் மரணம் தொடர்பாகவே இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது.

இவரது கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் காணப்பட்ட கயிறு கழுத்தை இறுக்காத வகையில் முடிச்சிடப்பட்டிருந்ததாகவும் -

அந்தக் கயிறும் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-ரி-15)

# எமது நீண்ட பாரம்பரியத்தின் எச்சங்களே கிராமியக் கலைகள்

## அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் உரை

மண்டைதீவு,ஓக.25

கிராமியக் கலைகள் எமது நீண்ட பாரம்பரியத்தின் எச்சங்கள். அவை பாதுகாக்கப்படவேண்டும்.

- இவ்வாறு புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அரசண்ணா தெரிவித்தார்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடந்த இந்த விழாவில் உரையாற்றிய அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் இயங்கும் புலிகளின் அரசியல் கல்லூரியைச் சேர்ந்த நான் இங்கு தற்செயலாக வந்தேன். அரசியல்பொறுப்பாளர் இளம்பரிதி வன்னி சென்றிருப்பதால் இந்த விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் வேறு நோக்கத்துக்காக இங்கு வந்திருந்தாலும், இந்த விழாவில் கலந்துகொள்வதற்காகவே இங்கு வந்திருப்பதாக உணர்கிறேன்.

புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்திலும் இருந்துள்ளேன். அதனால் கலைத்துறையில் எனக்கு ஆழமான ஈடுபாடு உண்டு. இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது நான் மகிழ்ச்சியடைகிறேன். அதேநேரத்தில் இந்த மண்ணுக்காகப் போராடி மறைந்த போராளிகளின் நினைவுகள் என்னை சோகத்தில் ஆழ்த்துகின்றன.

அவர்கள் ஆடியது, பாடியது, போராடியது அனைத்தும் எமது கிராமியக் கலைவடிவங்களில் பொதிக்கப்படவேண்டும்.

எங்களது நீண்ட இருப்பையும், வரலாற்றையும் அடையாளப்படுத்துவது கிராமியக்கலைகளே. எமது பண்பாட்டின் எச்சங்கள் பேணப்படவேண்டும். அந்த வகையில் பேராசிரியர் சுவித்தியானந்தன், பேராசிரியர் அசண்முகதாஸ், மௌனகுரு போன்றவர்களைத் தொடர்ந்து மெற்றாஸ்மயில் முன்னெடுக்கும் கலைத் தொண்டு பாராட்டப்படவேண்டும். கலைஞர்கள் அடையாளப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்படுவது காலத்தின் தேவை ஆகும்.

மக்களதும் சமூகத்தினதும் உயிர்ப்பினை, உயிர்த்துடிப்புடன் வெளிக்கொண்டு வருபவர்கள் கலைஞர்கள்.

கிராமிய இசையில் இருந்தே கிராமியக் கலைகள் பிறக்கின்றன. நாங்கள் முதலில் கேட்பது 'தாலாட்டு'. தெரியாத வயதிலேயே அந்தக் கலை எமது இதயத்தோடு சங்கமித்து ஒன்றித்து விடுகிறது. தமிழகத்துக்கும் எமக்கும் கலையிலும் நீண்டகாலத் தொடர்புண்டு; தற்போதைய சூழ்நிலை தற்காலிகமானது.

எமது தமிழ்ப் பிரதேசத்துக்கு ஒரு தனிக் கலைவடிவம் அமைக்கப்படவேண்டும். இந்த வடிவம் கண்டிய நாட்டின் கலை வடிவத்தை விஞ்சி நிற்கவேண்டும். அது கிராமியக் கலை வடிவத்திலேயே அமையவேண்டும்.

நீண்டகாலமாக அவர்களுக்கென ஒரு தனி அரசு இருந்ததே அவர்களின் கலை பாதுகாக்கப்பட்டதற்கான பிரதான காரணமாகும்.

இந்த நிகழ்வில் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், மரியசேவியர் அடிகள் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இறுதிநிகழ்வாக தைரியநாதனின் நெறியாள்கையில் உருவாக்கம் பெற்ற 'பூதத்தம்பி' இசை நாடகமும் மேடையேற்றப்பட்டது. (ம-ரி)

# 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்து ஆலயம் இந்தோனேஷியாவில்!

## பூமிக்குள்ளே புதைந்திருந்தது

ஜகார்த்தா,ஓக.25

இந்தோனோஷியாவில் பழமை வாய்ந்த இந்துக் கோவில் கண்டுபிடிக் கபபட்டிருக்கிறது. அது ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முந்தையது என்று தெரிவருகிறது.

இந்தோனிஷியாவில் ஆரம்ப காலத் தில் இந்து மதமும், புத்த மதமுமே இருந்து வந்தன. சுமார் 500 முதல் 600 ஆண்டுகளில்தான் அங்கு முஸ் லிம் மதம் பரவத் தொடங்கியிருக் கிறது.

இதற்கான பல ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. ஆரம்ப காலத் திலிருந்துவந்த இந்துக் கோயில் கள், புத்தமத கோயில்கள் கண்டறியப் பட்டு வருகின்றன.

இந்தோனேஷ்யாவில் மேற்கு ஜாவா பகுதியில், அதாவது தலைநகர் ஜகாத தாவிலிருந்து 132 கிலோமீற்றர் தொலைவில், பூமிக்கு அடியில் இருந்த இந்துக் கோயில் ஒன்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கிராமவாசி ஒருவர் பூமிக்கு அடி யில் இருந்த மரத்தின் வேர்ப் பகுதியை தோண்டி எடுத்தபோது மண்ணுக்குள் புராதன கோயில் இருப்பது தெரிய வந்தது.

இந்தக்கோயில் ஆயிரத்து 300 ஆணடுகளுக்கு முந்தையதாக இருக கக் கூடும் என்று தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் கருதுகிறார் கள்.

இதுபோல் சில இடங்களில் புத் தர் கோயல்கள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## பாப்பரசருக்கு மிரட்டல்; போலாந்தில் ஒருவர் கைது

வார்சா,ஓக.25

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரைக் கொல்லப்போவதாக மிரட்டியவரைப் போலாந்து பொலீ ஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் பெயர் ராஸார்ட். போலாந்துக்கு பாப்பரசர் வருவதற்கு முன்தினம், டான்ஸ்க் என்ற நகரில் ராஸார்டை பொலீஸார் கைதுசெய்தனர்.

பாப்பரசரை கொல்லப்போவதாக போலாந்தில் உள்ள ஒரு பத்திரிகைக்கு மின்அஞ்சல்மூலமாக அவர் செய்தி அனுப்பினார். இதையடுத்து அவர் கைது செய்யபட்டார். அவரை 3 மாதங் களுக்குக் காவலில் வைக்க நீதிமன் றம் உத்தரவிட்டது.

(ஒ)

## வருமானத்திற்கு மீறிய செலவுக்காக வின்னி மண்டேலா மீது நடவடிக்கை

கேப்டவுன்,ஓக.25

தென்னாபிரிக்க நாட்டின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் முன் னாள் மனைவி வின்னி மண்டேலா. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி யின் மகளிர் பிரிவுத் தலைவியான இவர் கடந்த 1994ஆம் ஆண்டுமுதல் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து வருகிறார். அங்குள்ள சட்டப்படி உறுப்பினர்கள் தங்களது ஆண்டு வருமானம் மற்றும் செலவு விவரங் களை தாக்கல் செய்யவேண்டும்.

இதன்படி வின்னி மண்டேலாவின் வருமானத்தைவிட அவரது செலவு அதிகமாக இருந்தது. இதையடுத்து விதிமுறைகளை மீறியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதனால், அவர்மீது விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. விசா ரணையில் வின்னி மண்டேலாவின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு அபராதம் விதிக்கப்படும். அடுத்த கட்டமாக குற்ற நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்படும்.

(ஒ)

## தலையில்லா முண்டத்தால் மலேசிய மாணவர் பீதி!

கோலாலம்பூர்,ஓக.25

மலேசிய மாணவர்களை 'தலை யில்லா முண்டம்' பற்றிய அச்சம் ஆட்டிப் படைக்கிறது. அங்கு இந்த மாதத்தை பேய்கள் மாதம் என்று 'தாவோ' மதப்பிரிவினர் கொண்டாடுகிறார்கள். இந்த மாதத்தில் குழந்தைகளை இர வில் தனியே விட்டால் பேய்பிடித்து விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

சேனைவாங் நகர பள்ளிக்கூட நூல கத்தில் தலையில்லா முண்டத்தை பார்த்ததாக ஒரு மாணவன் கூறிவிட் டான். இது வேகமாகப் பரவியதால் அந்தப் பாடசாலைக்கு மாணவர்களை அனுப்பாமல் பெற்றோர்கள் தடுத்து விட்டார்கள்.

'அதெல்லாம் புரளி. நம்பாதீர்கள் பிள்ளைகளை தாராளமாக அனுப்புங் கள்' என்று பாடசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

## மைக்கல் ஜாக்சனுக்கு 3ஆவது குழந்தை

நியூயோர்க்,ஓக.25

பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜாக்சன் (வயது 44) 3ஆவது குழந் தைக்கு தந்தையானார்.

கடந்த ஜூலை 30ஆம் திகதி அமெரிக்காவின் லொஸ் வேகாஸில் நடந்த ஓர் இசைநிகழ்ச்சியின்போது 6மாத ஆண் குழந்தையை தனது குழு வினருக்கு மைக்கேல் ஜாக்சன் அறி முகப்படுத்தியதாக 'பீப்பிள்' சஞ்சிகை தெரிவிக்கிறது.

இக்குழந்தைக்கு பிரின்ஸ் மைக் கேல் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இக்குழந்தை தத்தெடுக்கப்பட வில்லை. ஆனால், குழந்தையின் தாய் யாரென்று தெரியவில்லை என்று அந்த சஞ்சிகையில் மேலும் குறிப்பிடப்பட டுள்ளது.

மைக்கேல் ஜாக்சன் தனது மனைவி டெப்பீ ரோவை 1999ஆம் ஆண்டு விவாகரத்து செய்துவிட்டார். அவர் மூலம் பிரின்ஸ் மைக்கேல் (5 வயது) என்ற ஆண்குழந்தையும், பரிஸ் (4 வயது) என்ற பெண்குழந்தையும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒட்டிப் பிறந்த குழந்தைகள் பிரிக்கப்பட்டன!

பெய்ஜிங்,ஓக.25

சீனாவில் ஒட்டிப் பிறந்த இரட் டைப் பெண் குழந்தைகளை சத்திர சிகிச்சை செய்து மருத்துவர்கள் பிரித்தனர்.

சீனாவில் இத்தகைய சத்திர சிகிச்சை நடப்பது இது 4ஆவது தடவையாகும். மார்பு, வயிறு ஆகிய பகுதிகள் ஒட்டிய நிலையில் கடந்த ஜூன் 20ஆம் திகதி இக்குழந்தைகள் பிறந்தன. இவற்றின் பெற்றோர் ஹூபி மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இராணுவ மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை 7 மணி நேரம் சத்திரசிகிச்சை நடந்தது. மருத்துவ செலவை ஏற்கமுடியாத நிலையில் பெற்றோர் இருப்பதால், சிகிச்சைக்குக் கட்டணம் ஏதும் வசூலிக்கவில்லை என்று மருத்துவர்கள் கூறினர். (ஒ)

## பெனாஸிரின் மேன்முறையீடு பாக். நீதிமன்றில் தள்ளுபடி

இஸ்லாமாபாத்,ஓக.25

இலஞ்ச ஊழல் வழக்கில் 3ஆண்டு கள் சிறைத்தண்டனை பெற்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனா ஸிர் பூட்டோ நாட்டைவிட்டு வெளியேறி பிரிட்டனில் தங்கியிருக்கிறார். எதிர் வரும் ஒக்ரோபர் 10ஆம திகதி பாகிஸ தானில் நடக்கவிருக்கும் நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடப்போவ தாக அவர் அறிவித்திருக்கிறார். நாடு திரும்பினால் கைதுசெய்ய ராணுவ ஆட்சி தயாராக இருக்கிறது.

இதற்கிடையில் தனக்கு விதிக் கப்பட்ட சிறைத்தண்டனையை எதிர்த்து பெனாஸிர், ராவல் பிண்டி நீதிமன்றில் மேன்முறையீடு செய் தார்.அவர் சார்பில் சட்டத்தரணி பாபர் கோசா இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

ஆனால், நீதிபதிகள் ஷபீர் அக் தர், மியான் ஜகாங்கீர் ஆகியோர் வழக்கை விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த வழக்கைத் தொடர பெனா ஸிரும், அவரது வக்கீல் கோசாவும் தகுதியற்றவர்கள் என்று நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பு பெனாஸிருக்கு பெரிய பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ஒ)



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்கு ஆதரவு தெரிவித்து அவரது ஆதரவாளர்கள் அந்நாட்டின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் சமீபத்தில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## ஆப்கானில் குண்டுவெடிப்பு

காபூல்,ஓக.25

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள திரையரங்கில் குண்டு வெடித்தது. இதில் எவரும் காய மடையவில்லை. ஆனால், திரையரங் கின் சில பகுதிகள் சேதமடைந்தன. ஒரு வாரத்தில் காபூலில் நடக்கும் 3 ஆவது குண்டு வெடிப்புச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)


உ

பன்னாலை, தெல்லிப்பழை



திருவருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம்

மஹோற்சவ கால அபிஷேக விஞ்ஞாபனம்

அடியார்களே!

ஆரம்பம் : நாளை (26-08-2002) திங்கட்கிழமை
நிறைவு : 06-09-2002 வெள்ளிக்கிழமை
வைரவர் பொங்கல் : 07-09-2002 சனிக்கிழமை

மேற்படி காலங்களில் தினமும் காலை 8.30 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி, தொடர்ந்து மூலமூர்த்திக்கு விசேட பூசை நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் திருவருட்பிரசாதம் வழங்கப்பட்டு நிறைவுபெறும்.

☛ எல்லாம்வல்ல கற்பக விநாயகரின் கர்ப்பக்கிருகம்முதல் இராஜகோபுரம்வரையும் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அவை சிறப்புடன் நிறைவேற அன்பர்கள், அடியார்களின் பொருளுதவி, நிதியுதவிகளை நாடி நிற்கின்றோம்.

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!"

கற்பக விநாயகரின் பொற்பதம் பணிந்தால்
கவலைகள் யாவும் நீங்கிவிடும்!

இறை திருத்தொண்டில்
பிரம்மஸ்ரீ இ.சபாரத்தினக் குருக்கள்,
பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா
(ஆதீன கர்த்தாக்கள்)

பன்னாலை,
தெல்லிப்பழை.
(7494)



31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
1932
-
06
-
29



உதிர்வு
2002
-
07
-
26

அமரர் வெட்டனர் முருகன்

(பொருளாளர், கைதடி வடக்கு வாலாம்பிகை அம்பாள் தேவஸ்தானம், முன்னாள் பிரபல புகையிலை வர்த்தகர்.)

அன்புடனும் பண்புடனும்
சிவத்தொண்டு பலபுரிந்து
இறைவனடி சேர்ந்த அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி வடக்கு,
கைதடி.

ஆலய பரிபாலனசபை,
அருள்மிகு வாலாம்பிகை அம்பாள் தேவஸ்தானம்.

(7489)


## மரண அறிவித்தல்கள்

### அருளானந்தம் திருமேனி

உரும்பிராய் கிழக்கு, சென்மைக்கேல் கோயிலடியைச் சேர்ந்த அருளானந்தம் திருமேனி அவர்கள் நேற்று(24.08.2002) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - சவுந்தரம் தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சந்தனத்தின் அன்புக் கணவரும் பரஞ்சோதி (அழகுநிலா தொலைத்தொடர்பகம் - இளவாலை), ஞானசோதி (வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்), அலெஸ்ரீற்றா, மேரி மெற்றிலின், இன்பராணி (அமெரிக்கா), மேரி திரேசா, சகாயராணி, வினிபிறெட்(கனடா), மரியசீலன், குணசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யேசுதாசன் (இ.மி.ச), ஞானரத்தினம், சோதிநாதன், வரதன், சிவராசா, புஷ்பராணி, வடா, காந்திமதி, சந்திரா, பவானி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மாலதி, றெஜிதரன்(பல்கலைக்கழகம் - வவுனியா), றெஜினோல்ட், ராஜி, வலன்ரீனா, நிசாந்தன், ரொசாந்தன், சிந்துஜன், கோகிலவதனி, மதிவதனி, பிரதீபன், சசி, பிரியா, சர்மியா, ஜெராய்சன், கீர்த்தனா, நிக்சன், சஞ்சூலன் ஆகியோரின் அன்புப் பேரனும் இராசம்மா, எல்சபேத், திரேசம்மா, காலஞ் சென்ற சாமுவேல் மற்றும் மதுரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் புனித மைக்கேல் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.மைக்கேல் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு. (7461)

தகவல்:
மரியசீலன் (மகன்)

### திருமதி மரகதாம்பிகை சக்திவேல்

இல.78/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி மரகதாம்பிகை சக்திவேல் அவர்கள் 21.08.2002 புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சக்திவேல் ஆச்சாரியின் அன்பு மனைவியும் செல்வராஜா (உரிமையாளர், றொலெக்ஸ் பேக்கரி), இரத்தினசபாபதி, காலஞ்சென்ற பாலச்சந்திரன், சரவணமுத்து(ராசா), முத்துமாலை(ராசாத்தி), லலிதா (மணி), சாரதா, அனுராதா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஐயம் பெருமாள், கதிரவேல், ஏரம்பமூர்த்தி, ரவீந்திரன், சுலோஷனா, திலகலட் சுமி, விஜயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் மருதமுத்து, பத்மா வதி, அமரர் சக்திவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகவே லின் மைத்துனியும் சுரேஸ், கணேஸ், சோபனா, சத்தியா, இந்துஜா, பிரதீபா, சரண்ஜா, அர்ஜுன், தர்ஷனா, பத்மினி, ஸ்ரீராம், சுகேன், ஜனகன், நர்மதா, சஜீவன், வித்தியா, சர்மிலா, சந்தோஷ், சந்தீப், சுவாக்கியா, ரம்மியா, சஞ்சிதா, மெனிஷா, ரிசிகா, தனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கஜானி, ஸ்ரீகௌதம் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தக னக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

78/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (7497)

தகவல்:
மூர்த்தி
(மருமகன்)

ST.JOHN'S COLLEGE, JAFFNA
CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA

## ADMISSION - 2003

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. தரம் 1, தரம் 6.
2. அ). விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 02.09.2002 முதல் 16.09.2002வரை பெற்றுக் கொள்ளலாம்.
   ஆ). எக்காரணம்கொண்டும் 16.09.2002க்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ). எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ). விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 23.09.2002. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 300.00
7. வயதெல்லைகள்: அ) தரம் 1: விண்ணப்பதாரி 01.02.1997க்கும் 31.01.1998க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6: விண்ணப்பதாரி 01.02.1992இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை: தரம் 6 வகுப்புக்கு 12.10.2002 காலை 9.00மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புகளுக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாள்களில் பெற்றுக்கொள்ளலாம் - பரீட்சை மார்கழியில் நடத்தப்படும். விவரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

(C/23586) -அதிபர்கள்



## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 - 02 - 1935

உதிர்வு 05 - 09 - 2001

### திருமதி சிவபாக்கியம் இராசரத்தினம்

(இளைப்பாறிய கமத்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர், கிராமசேவையாளர் - உடுவில்)

எம்இல்லம் நிறைந்த உத்தமியே - இன்றெம்
உள்ளம் நிறைந்த வேதனையைத்தந்துவிட்டு
பொட்டோடும் பூவோடும்
பொன்னுலகம் போனதென்ன?

(7432)

டச்சு வீதி,
உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உடன்பிறப்புக்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 1939 - 06 - 04

ஆண்டவன் திருவடியில் 2002 - 07 - 26

### அமரர் மகேஸ்வரி வல்லிபுரம்

2002-07-26 அன்று இறைபதமடைந்த அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து எமது பிரிவுத்துயரைப் பகிர்ந்துகொண்ட மற்றும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (25.08.2002)ஞாயிறு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு, மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், சுற்றத்தார், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய்,
கொடிகாமம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
M.சின்னராசா,
கோகிலா தொலைத் தொடர்பு நிலையம்,
பருத்தித்துறை வீதி, கொடிகாமம். T.P.No.: 213030

(7399)


## மகாநாயக்கரின் யாழ்.விஜயம் பிற்போடப்பட்டது

அஸ்கிரிய மகாநாயக்கர் வண.ரம்புக்கவே விபஸி தேரரின் யாழ்.விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

நேற்று அவர் யாழ்ப்பாணம் மேற்கொள்ளவிருந்த விஜயம் அவருக்கு ஏற்பட்ட சுகவீனம் கரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## சிலாவத்துறையில் மக்கள் மீளக்குடியமர்வு

மன்னார்,ஓக.25

மன்னார், சிலாவத்துறையைச் சேர்ந்த மக்கள் சுயவிருப்பத்தின்படி தங்களது பிரதேசங்களில் மீளக் குடியேறி வருகின்றனர். இவ்வாறே சிலாவத்துறையில் அமைந்திருக்கும் மணற்குளம் கிராம மக்களும் சுயவிருப்பின்படி மீளக்குடியேறி வருகின்றனர்.

இம்மக்களுக்கு வன்னி புனர்வாழ்வு பிரதி அமைச்சர் நூர்தீன் மசூர், முசலி பிரதேசச் செயலகம், மன்னார் திட்டப் பணிப்பாளர், அரச அதிபர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அத்தியாவசியச்சேவைகள் முதற்கொண்டு ஏனைய பல தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றன. (ம)

## மட்டு-திருமலை வீதி மக்கள் போக்குவரத்துக்கு!

மட்டக்களப்பு,ஓக.25

மட்டக்களப்பு-திருகோணமலை நெடுஞ்சாலை பொதுமக்கள் போக்குவரத்துக்காக கடந்த வியாழக்கிழமை திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த 12 வருடங்களாக மூடப்பட்டிருந்த இந்த நெடுஞ்சாலை போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒருபகுதியில் நெடுஞ்சாலையின் இருபுறமும் கொம்மாந்துறை இராணுவ முகாம் அமைந்துள்ளமையால் அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10)


### படிவம்

கிராம உத்தியோகத்தர் சேவை தரம் IIக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



### காணி விற்பனைக்கு

யாழ்நகரில் குருசோ வீதியில் 181ஆம் இலக்கத்திலுள்ள மூன்று பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
J.E.இராசநாயகம்
இல.40. மாட்டீன் லேன்.
யாழ்ப்பாணம்.
(7439)



### ஜெசித்தாரா

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா வழங்கும்
☆சுத்த சைவ போசனம் (பிரத்தியேக சமையலறையில் தயாரிக்கப்பட்டது)
☆எல்லாவித மரக்கறி, ஊறுகாய் வகைகளுடன் ரூபா 65/= மட்டுமே!
☆மற்றும் உணவு வகைகளையும் வழமையான நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜெசித்தாரா
உங்கள் உணவகம்
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(7442)



### தேவை

கொம்பியூட்டர், கணக்கியல் சம்பந்தமாக வேலைசெய்யக் கூடிய A/L தராதரம் உள்ள பெண்கள் தேவை.

சொந்தக் கையெழுத்தில் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்
தொடர்பு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (7444)



### அந்தண மாணவர்களுக்கு!

2002 ஏப்ரல் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் தங்கள் விவரங்களை 2002-09-05ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பிவைக்கவும்.

சிவன் கோயில்,
நல்லூர். (C/23276)

செயலாளர்
நியந்தா.



### PX சிறந்த பூஸ்டர் நியாய விலையில்




- எந்தவொரு பலவீன சமிக்ஞைப் பகுதியிலும் பெறக்கூடியதாயுள்ள 35 உயர் பூஸ்டர் தொழிற்பாடு.
- மிகு நேர்த்தி நுட்பம் வாய்ந்த் தாழ்வான ஓசை
- உங்கள் வீட்டின் உட்புறத்துடன் பொருந்தும் நீருட்புகா டியூலக்ஸ் உறை.

(C/23267)

TV சென்டர்
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி: 434742
தொலைநகல் : 437687 மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.



## ஓராண்டு நினைவுதினம்



தோற்றம் 19 - 10 - 1917

மறைவு 25 - 08 - 2001

### அமரர் நல்லையா ஸ்ரீபன் நவரத்தினம்

(கரம்பகம்)

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"

காலங்கள் ஓராண்டு சென்றாலும் - ஐயா
உந்தன் கால் நடை ஓசை எம்காதில் ஒலிக்குது
ஓர் ஆண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உந்தன் அன்பும் ஆதரவும் எமைவிட்டு நீங்காது - ஐயா
உந்தன் உயிரும், உடலும் பிரிந்தாலும் - ஐயா
உறவு ஒரு போதும் பிரியாது.

மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய். (7376)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.



## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்...



மண்ணில் பிறந்தது 25 - 01 - 1980

விண்ணில் பறந்தது 25 - 08 - 2000

### செல்வன் பாலகிருஸ்ணன் ஜெயராஜ்

(கண்ணன்)

மீளாத பயணம் செய்த கன்றையெண்ணி ஏங்கி நிதம்
மூளாத தீயிங்கு நெஞ்சில் கனல்கிறதே!
மாளாத துயரமிதை ஏன் மகனே எமக்களித்தாய்?
கேளாதோ எம் அழைப்பு? வருவாயோ எமை நினைத்து?
என்றென்றும் உன் நினைவுகளில் மூழ்கி கனக்கும்
இதயங்களுடனும், கனவுகளுடனும் காலத்தைக் கழிக்கும்.

உனது
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணன், சித்தப்பாமார்,
சித்திமார், மாமாமார், மாமிமார்.

வி.பாலகிருஸ்ணன்,
இல.10, கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை.

(7370)

உதயன்

# சாரதி அனுமதிப்பத்திரத்தின் பெயரால் ஆதிக்க நடவடிக்கை

யாழ்.குடாநாட்டில் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆனால், அதற்கிடையில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களிடம் தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கையை மட்டும் பொலீஸார் தீவிரமாக ஆரம்பித்திருக்கின்றார்கள். இதுகுறித்து பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் பணி இடம்பெறவில்லை.

அவ்வப்போது இந்தப் பணியை ஆரம்பிப்பதாக ஆரவாரம் செய்வார்கள். அதோடு சரி. செயலில் எதுவும் நடக்காது; நடக்கவில்லை.

ஓரிரு தடவை ஏதோ சாட்டுக்குச் செய்தார்கள். அதுவும் உருப்பெறவில்லை.

அண்மையில்கூட யாழ்.மக்களிடமிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான பல்லாயிரக் கணக்கான விண்ணப்பங்களைத் திரட்டினார்கள். ஆனால், அதற்கு மேல் எதுவும் நடக்கவில்லை.

யாழ்.செயலகத்தில் இயங்கும் யாழ்.மாவட்ட மோட்டார் ஊர்திப் பிரிவிற்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான தகைமை உடைய அதிகாரி ஒருவர்கூட இன்னும் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை.

அதைச் செய்யாமல் விட்டுவிட்டு யாழ்.குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துவோரைத் தண்டிக்க முயல்வது அநியாயம்; அத்துமீறல்; அராஜகம்.

இலங்கை அரசின் அடக்குமுறைப் போக்குக்கு இது ஒரு நல்ல உதாரணம்.

தமிழ் மக்களுக்குச் செய்யவேண்டியதை செய்யாமல் விட்டுவிட்டு, தனது சட்ட ஆதிக்கத்தை மட்டும் தமிழ் மக்கள்மீது பிரயோகிக்கும் - சிங்கள அரசுகளின் காலங்காலமான - பண்புப்போக்கை எடுத்துக்காட்டும் உதாரணம் இது.

நாட்டில் வீதி விபத்துக்குள் மலிந்துவிட்டன. மக்கள் அதிக பாதிப்புறுகின்றார்கள். விபத்துகளில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்குப் பொலீஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்பதெல்லாம் நியாயமான வாதங்கள்தாம்.

ஆனால், அதற்கு வழி - வாகனம் செலுத்துவோருக்கு போக்குவரத்து விதிகளைப் போதித்து, அதனைப் புரிந்துகொண்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கி, அவர்களை மட்டும் வாகனங்களை வீதிகளில் செலுத்த அனுமதிப்பது.

இதில் முதல் பணியைச் செய்யாமல் மூன்றாவது - தண்டனைக்குரிய - நடவடிக்கையை எடுக்க முயல்வது, நிலைமையைப் புரியாமல் சிங்கள அரசின் பொலஸார் குடாநாட்டு மக்கள்மீது மிளகாய் அரைக்கும் செயலன்றி வேறில்லை.

பன்னிரண்டு வருடங்களாகக் குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க உருப்படியான நடவடிக்கை ஏதும் அரசு எடுக்காத நிலையில், அது இல்லாதவர்கள் குடாநாட்டில் வாகனம் செலுத்துவதைத் தண்டிக்க முயலும் பொலீஸார் அதன்மூலம் என்ன எதிர்பார்க்கின்றார்கள்?

குடாநாட்டு மக்கள் வாகனமே செலுத்தக்கூடாது என்று எதிர்பார்க்கின்றார்களா?

வெறும் சட்டங்களை வியாக்கியானம் செய்து தண்டனைகளை வழங்குவதுடன் மட்டும் நீதிமன்றங்களின் பணி முடிவடைந்துவிடுவதில்லை. மக்கள் பிரச்சினையை மனிதாபிமானக் கண்கொண்டு நோக்கி சட்டத்தின் பெயரால் நடக்கும் அத்துமீறல்களைக் கண்காணிப்பதும் நீதிமன்றங்களின் தலையாய கடமை என நினைக்கின்றோம். அது உண்மையானால் இந்த விடயத்திலும் எமது நீதிமன்றங்கள் - நீதிபதிகள் - தாமாகவே தலையிட்டு உரியவர்களுக்கு, உரிய பணிப்புரை கொடுத்து நியாயம் பெறவழி செய்யவேண்டும்.

'பொலீஸ்' என்பதும் வெறும் மக்கள்மீது தண்டனை விதிக்க வழி செய்யும் அமைப்பல்ல. மக்கள் பிரச்சினையைப் புரிந்துகொண்டு செயற்பட்டால்தான் அந்த அமைப்பு செவ்வனே செயற்பட மக்கள் ஒத்துழைப்புக்கிடைக்கும்.

அறுபது, எழுபது, எண்பதுகளில் தமிழர் விடயங்களில் பொலீஸார் நடந்துகொண்ட சர்வாதிகாரப் போக்கும் நாட்டின் இன்றைய யுத்த சூழ்நிலைக்குக் காரணம் என்பதையும் இங்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

பொலீஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பானவர் உள்துறை அமைச்சர். அவருக்கு எதிராக அண்மையில் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது அவருக்காக விழுந்தடித்துக் குரல் கொடுத்தவர்கள் நமது எம்.பிக்கள்தான். அவர்களுக்கும் இவ்விடயம் சமர்ப்பணம்.

குடாநாட்டு மக்களுக்கு நீதி கிடைக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுப்பார்களா?

---

## எதிரணியிலிருந்து எதிர்பாராத ஆதரவு

# தேசிய அரசு அமைக்க ஐ.தே.முன்னணி முஸ்தீபு!

கொழும்பு,ஓக.25

அரசமைப்புக்குத் திருத்தம் கொண்டுவரும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முயற்சிகளுக்கு எதிரணியில் உள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தரப்பிலிருந்து எதிர்பார்த்ததைவிட அதிக ஆதரவு கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து தேசிய அரசொன்றை அமைப்பது குறித்து ஐ.தே.முன்னணி ஆராய்ந்து வருவதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை பறிக்கவும், நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்கவும் வகைசெய்யும் இரண்டு அரசமைப்புத் திருத்தங்களை கொண்டுவருவதற்கு ஆளும் ஐ.தே.முன்னணி அரசு தீர்மானித்துள்ளது.

இதற்குத் தேவையான ஆதரவைப் பெறுவதற்காக பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் இழுக்கும் நடவடிக்கைகளையும் ஐ.தே.முன்னணி மேற்கொண்டிருந்தது.

இதற்கிடையில் திருகோணமலையில் இடம்பெற்ற ஐ.தே.கவின் தேசிய நிறைவேற்றுக் குழு மாநாட்டில் பங்கேற்ற அக்கட்சியின் தலைவர்கள், அரசமைப்பைத் திருத்துவதற்கு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்காவிட்டால் நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாகப் பொதுத்தேர்தலை நடத்துவதெனத் தீர்மானித்ததாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. இதனையடுத்தே எதிர்பார்த்ததைவிட அதிக எண்ணிக்கையான எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தேர்தலைச் சந்திக்க அச்சப்படுவதாலும், நாடாளுமன்றம் இடையில் கலைக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் கிடைக்காது போய்விடும் என்பதாலும், இவை போன்ற வேறுசில காரணங்களாலும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுத் தரப்புக்கு ஆதரவளிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு கிடைத்த எதிர்பாராத சந்தர்ப்பத்தை - பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை - அரசுத் தரப்பு பெற்றுக்கொண்டதை அடுத்தே தேசிய அரசு அமைக்கும் முயற்சிக்கு உத்வேகம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

'நாட்டின் இனப்பிரச்சினைக்கான அமைதித் தீர்வை முன்னெடுப்பதற்காக' என்ற கோஷத்தோடு இந்தத் தேசிய அரசு அமைக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி, தனது அரசியல் ஸ்திரத் தன்மையை வலுப்படுத்திக்கொள்ள ஆளும் கட்சி தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

பொ.ஐ.முன்னணியில் தீவிர சந்திரிகா ஆதரவாளர்களாக இருப்போரும், ஜே.வி.பியினரும் இந்தத் தேசிய அரசு அமைக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டார்கள் என்றும் கருதப்படுகின்றது. (ஒ)

---

### விடுதியில் வசதியின்மை

# பொதுக் கிணறுகளை நாடும் தென்னிலங்கைப் பயணிகள்

தென்னிலங்கையில் இருந்து யாழ்.வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு யாழ்ப்பாணத்தில் தங்குமிட வசதிகள் வழங்கும் விடுதி உரிமையாளர்கள், பிறவசதிகளை போதியளவு வழங்காமையினால் பயணிகள் தாம் தங்கியுள்ள விடுதிகளுக்கு அருகில் அமைந்துள்ள பொதுக் கிணறுகள் மற்றும் மலசலகூடங்களைப் பயன்படுத்திவருவதாகக் கூறப்படுகிறது. இதனால் பொது இடங்கள் அசுத்தமாகி வருவதாக அவற்றினருகே குடியிருப்பவர்கள் குறைகூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு தென்னிலங்கையில் இருந்து வருபவர்கள் தங்கிச்செல்ல பல விடுதிகள் தற்போது இயங்கி வருகின்றன. ஆனால், இந்த விடுதிகளில் பெரும்பாலானவற்றில் தங்குபவர்களின் தேவைக்கு போதுமான தண்ணீர் வசதியோ மலசலகூட வசதிகளோ கிடையாது. இந்நிலையில் விடுதி உரிமையாளர் தமக்குள்ள நெருக்கடியைக் குறைக்கும் பொருட்டு அருகில் உள்ள பொது இடங்களை குறிப்பாக ஆலயக் கிணறுகளை பயன்படுத்தும்படி தங்குவோருக்கு கூறிவிடுகின்றனர்.

அதைக் கேட்டு பொதுக் கிணறுகளில் சென்று நீராடும் பயணிகள் பொது இடம் என்றோ, ஆலயக் கிணறு என்றோ கவனத்திற்கொள்ளாமல் தமது விருப்பத்துக்கேற்ப அவற்றை பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

விடுதிகளை நடத்தும் உரிமையாளர்கள் அங்கு தங்குவோருக்குத் தேவையான வசதிகளை வழங்கினால் இப்பிரச்சினைகளை முற்றாகத் தவிர்க்க முடியும் என பொதுமக்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், பண ஆசையால் சில தங்கும் விடுதி உரிமையாளர்கள் அளவுக்கதிகமானவர்களை தங்கவைப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

---

# பச்சைமரம் தறிக்க மண்டைதீவில் தடை!

மண்டைதீவு,ஓக.26

மண்டைதீவில் பச்சைமரங்கள் தறிக்கப்படுவது தடைசெயயப்பட்டுள்ளது.

மண்டைதீவில் மக்கள் மீளக்குடியமராத பகுதியில் இருந்து மரங்களை தறித்து எடுத்துவருவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம்முதல் இத்தடை நடைமுறைக்கு வந்துள்ளது. மண்டைதீவு பண்ணைச்சந்தியில் உள்ள கடற்படையினரின் சோதனை நிலையத்தில் தடையை மீறி மரங்களை எடுத்து வருபவர்களிடம் அவை பறிமுதல் செய்யப்படுகின்றன.

கடந்த சில மாதங்களாக உள்ளூரில் நிரந்தரமாக வசிப்பவர்களாலும் அயற்பிரதேசங்களில் இருந்து வருபவர்களாலும் காணிகளின் எல்லைகளாக விளங்கும் பூவரசமரங்கள் கணக்கின்றி தறிக்கப்பட்டு யாழ்.நகரப்பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

பட்ட மரங்களுடன் பச்சை மரங்களும் வெட்டப்படுவது தொடர்பாக வேலணைப் பிரதேச செயலகத்தில் பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர் என்று தெரியவருகிறது. அது தொடர்பாக கடற்படையினருடன் பிரதேச செயலக அதிகாரிகள் தொடாபு கொண்டதையடுத்தே இத்தடை விதிக்கப்பட்டது.

இதேசமயம் காயந்த பனை விறகு, தென்னை, பனை மட்டைகள் எடுத்துவருதற்கு தடையேதும் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

---

**நாளை**

ஆவணி 10
திங்கட்கிழமை
(26.08.2002)
திதி : திருதியை
முற்பகல் 9.20வரை.
நட்சத்திரம்: உத்திரட்டாதி
பி.ப. 1.44 வரை
சங்கடகர கணபதி
விரதநாள்
சுபநேரம் : 12.05 - 1.35
ராகுகாலம்: 7.35 - 9.05
(பழைய நேரப்படி)

---

**உதய வாக்கு**

உழைப்பு உடலை உறுதிப்படுத்துகிறது; துன்பங்கள் உள்ளத்தை உறுதிப்படுத்துகின்றன.

---

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு புதிய அரச அதிபர் நியமனம்

கிளிநொச்சி,ஓக.26



கிளிநொச்சி அரச அதிபராக தி.இராஜநாயகம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கிளிநொச்சி பிரதேச செயலராகவும் திட்டப் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

பின்னர் நிதித் திட்டமிடல் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இவர், தற்சமயம் கிளிநொச்சி அரச அதிபராகப் பதவியேற்கிறார்.

கடந்தகால இடம்பெயர்வுகளின்போது இவர் சிறந்த முறையில் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

---

### வெள்ளிக்கிழமை பூசை நேரம்

# நல்லூர் கொடித்தம்பம் அருகே தங்கச் சங்கிலிகள் அபகரிப்பு

வலி.வடக்கு,ஓக.25

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் உள்ளே பக்தியுடன் கொடித்தம்பப் பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த இரு பெண்களின் தங்கச் சங்கிலிகள் இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையாதலால் வழக்கத்திலும் விட அதிகமானோர் ஆலய வழிபாட்டில் கலந்துகொண்டதாகவும் -

இதனால், கொடித்தம்ப பூசை நடந்தபோது அங்கு நெருக்கடி அதிகமிருந்ததாகவும் -

அதனைப் பயன்படுத்தியே திருடர்களால் அந்தப் பெண்களின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலிகள் அபகரிக்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த பெண்மணியிடமிருந்து 2பவுண் நிறையுள்ள தங்கச் சங்கிலியும் -

மட்டுவிலைச் சேர்ந்த பெண்மணியிடம் 4பவுண் நிறையுள்ள தங்கச் சங்கிலியும் -

அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பாக ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள பொலீஸ் பணிமனையிலும், நல்லூர் பிரதேச செயலகத்திலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஒ-86)

---

### பூங்காவனத் திருவிழாவில்

# யுவதிகளிடம் சேஷ்டை புரிந்த இளைஞர்களுக்கு எச்சரிக்கை!

கொடிகாமம்,ஓக.25

ஆலயச் சுற்றாடலில் யுவதிகள்மீது ஐஸ்கிறீமை வீசி சேஷ்டை புரிந்த இரு இளைஞர்கள் சிலரால் பிடித்து எச்சரித்து அனுப்பப்பட்டனர்.

மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பூங்காவனத் திருவிழாவின்போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாகக் கூறப்படுவதாவது:-

சுமார் 22 வயதுடைய இரு இளைஞர்கள் ஆலயப் பகுதியில் ஐஸ்கிறீம் வாங்கினர். அப்போது அவ்வழியே இரு யுவதிகள் வந்தனர். அவர்களுக்கு ஐஸ்கிறீமை அந்த இளைஞர்கள் நீட்டினர். ஐஸ்கிறீமை வாங்கமறுத்த யுவதிகள் எதுவும் பேசாமல் சென்றனர்.

இதனையடுத்து இளைஞர்களில் ஒருவர் யுவதிகள்மீது ஐஸ்கிறீமை எறிந்துவிட்டு ஓடினார். இதனைக்கண்ட சிலர் அந்த இரு இளைஞர்களையும் பிடித்து கலாசாரச் சீரழிவைக் கண்டிக்கும் இளைஞர்களிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் பிடிபட்ட இருவரையும் கடுமையாக எச்சரித்து அனுப்பினர். (ஒ)

---

# ஆபரணம் கண்டெடுப்பு

வலி.வடக்கு,ஓக.25

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழாவின்போது கண்டெடுக்கப்பட்டு சுன்னாகம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட தங்க ஆபரணம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆலய வீதியில் கிடந்த இந்த ஆபரணத்தை தெல்லிப்பழை கிழக்கைச்சேர்ந்த கந்தையா சிவக்கொழுந்தும் அவர் மனைவியும் கண்டெடுத்து பொலீஸிடம் ஒப்படைத்திருந்தனர்.

மேற்படி ஆபரணத்துக்கு உரியவர்கள் உரிய ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து சங்கிலியைப் பெற்றுக்கொள்ளும்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்றப்பதிவாளர் சி.விக்னேஸ்வரமூர்த்தி அறிவித்துள்ளார். (ஒ-86)

உ
சிவமயம்

# 2ஆவது ஆண்டு நினைவலைகள்



அமரர்

## நாகசுந்தரம் ஏகாம்பரம் அவர்கள்

அவனியில்
01-03-1943

அரனடியில்
18-08-2000

திதி: 25.08.2002

அன்பின் திருவுருவாய் எம்மை ஆதரித்து, அரவணைத்து
அவனியில் எம்மை ஆளாக்கி வைத்த எமது குலவிளக்கே!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் அன்புடன் வாழ்ந்திட்ட
அருமையான நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது.
நீங்கள் மறைந்துவிட்டாலும் உங்கள் அன்பு முகமும்,
ஆதரவான இனிய பேச்சும் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

*உங்கள் ஆத்மா சாந்திபெற*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*- உங்கள் நினைவில் வாழ்ந்துவரும்:*
**குடும்பத்தினர்.**

*இல.82, செல்லர் வீதி,*
*நல்லூர்.*

(7422)

# முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி

பருத்தித்துறை

## அமரர் சிவாலிங்கம் வரதராஜா

அவர்கள்

(முன்னாள் உரிமையாளர் - கொழும்பு கலர் பிறிண்ட்ஸ், ராஜா சன்ஸ்)



மலர்வு
21-05-1928

உதிர்வு
09-09-2001

திதி 30-08-2002

அன்பின் இருப்பிடமாய்த் திகழ்ந்த எங்கள் அப்பாவே!
எமது குடும்பத்தை வழிநடத்திய தனித் தலைவனே!
எம்மைப் புவுலகில் இன்பமாய் வாழவைத்த தெய்வமே!
எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்துவிட்ட ஓயாத அலையே!
நீங்கள் எம்மைவிட்டகன்று ஆண்டு ஒன்று கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும் அகலாது.
அன்பாய் அரவணைத்து, ஆதரவாய் வளர்த்தெடுத்த தந்தையே!

*உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம.*

*ஓம் சாந்தி!*

168, வாசல வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13.

- அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(7406)

# ஜே.வி.பியினரின் கடந்தகால அட்டூழியங்கள்; அம்பலப்படுத்தினார் உள்துறை அமைச்சர்!

"ஜனாதிபதியின் கணவர் விஜயகுமாரதுங்க உட்பட 6 ஆயிரத்து 577 அரசியல்வாதிகளைப் படுகொலை செய்தவர்கள் ஜே.வி.பியினர். பொதுமக்களின் அத்தியாவசிய சேவைகளான இ.போ.ச. பஸ்கள் 533ஐயும் 13 பஸ் டிப்போக்களையும் 60 தனியார் பஸ்களையும் 16 ரயில்களையும் 24 ரயில் நிலையங்களையும் தீவைத்துக் கொளுத்தி நாசப்படுத்தியவர்களும் ஜே.வி.பியினரே.

"இவர்களால்தான் இன்று ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் கைதுசெய்யப்படுகின்றனர் என இவர்கள்தான் ஒப்பாரி வைக்கின்றனர்" என்று ஜே.வி.பியினரைச் சாடினார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

"இவர்களுடைய கடந்தகால காட்டுமிராண்டித்தனமான செயல்களை நாட்டுமக்களுக்கு அம்பலப்படுத்தவேண்டியது எமது கடமை. உள்துறை அமைச்சர் என்றவகையில் அவர்களால் நாட்டுக்கும் எமது மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்களை பட்டியல் போட்டுக்காட்டுகிறேன். இது ஏனையவர்களுக்கும் ஒரு பாடமாகவும் எச்சரிக்கையாவும் அமையட்டும்" என்று அமைச்சர் மேலும் கூறினார்.

ஏனைய சந்ததியினர் ஜே.வி.பியினரின் வரலாற்றைச் சரிவர அறிந்துகொள்ளவேண்டும் என்று தொடர்ந்து கூறிய அமைச்சர், ஜே.வி.பியினர் செய்த கொலைகள் மேற்கொண்ட அராஜகச் செயல்கள் ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் பட்டியல் போட்டுக்காட்டினார்.

## அமைச்சர் வெளியிட்ட பட்டியல் இது -

| படுகொலை செய்யப்பட்டவர்கள் | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01) அரச ஆதரவாளர்கள் | 075 | 681 | 967 | 012 | - | - | 1735 |
| 02) அரச உத்தியோகத்தர்கள் | 021 | 135 | 324 | 007 | - | - | 487 |
| 03) பொலீஸ் அதிகாரிகள் | 014 | 062 | 263 | 003 | - | - | 342 |
| 04) பாதுகாப்புப்படையினர் | 001 | 038 | 153 | 017 | - | - | 209 |
| 05) பொலீஸ் உத்தியோகத்தர்கள் | - | 047 | 017 | - | - | - | 064 |
| 06) தகவல் கொடுத்தவர்கள் | 011 | 069 | 167 | 011 | - | 02 | 260 |
| 07) அரசியல்வாதிகள் (விஜயகுமாரதுங்க உட்பட) | 002 | 003 | 001 | - | - | - | 006 |
| 08) அரசியல் பழிவாங்கல்கள் | 001 | 394 | 2679 | 118 | 11 | 07 | 3210 |
| a. பௌத்த மதகுருமார்கள் | | | | | | | 030 |
| b. கத்தோலிக்க மதகுருமார்கள் | | | | | | | 002 |
| c. கல்விமான்கள் | | | | | | | |
| i) பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் | | | | | | | 002 |
| ii) பாடசாலை அதிபர்கள் | | | | | | | 050 |
| d. ஊடகவியலாளர்கள் | | | | | | | 004 |
| e. தொழில்துறையினர் | | | | | | | |
| i) சட்டத்தரணிகள் | | | | | | | 010 |
| ii) வைத்தியர்கள் | | | | | | | 004 |
| iii) பொறியியலாளர்கள் | | | | | | | 003 |
| f. தோட்ட முகாமையாளர்கள் | | | | | | | 018 |
| g. வர்த்தகப் பிரமுகர்கள் | | | | | | | 006 |
| h. தொழிற்சங்க வாதிகள் | | | | | | | 027 |
| i. பொலீஸ் குடும்பத்தவர்கள் | | | | | | | 093 |
| j. படையினர் குடும்பத்தவர்கள் | | | | | | | 069 |
| 09) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் | - | 030 | 071 | 001 | - | - | 102 |
| 10) அமெரிக்க ஆதரவாளர்கள் | - | 023 | 041 | - | - | - | 064 |
| 11) ஊர்காவற்படையினர் | 004 | 050 | 032 | 012 | - | - | 098 |
| மொத்தம் | 129 | 1532 | 4715 | 181 | 11 | 09 | 6577 |

## நாசகாரச் செயல்கள்

**01. போக்குவரத்து**

a) தெருப்போக்குவரத்து

| | |
|---|---|
| i) இ.போ.ச. பஸ்கள் | 553 |
| ii) இ.போ.ச டிப்போக்கள் | 15 |
| iii) தனியார் பஸ்கள் | 60 |
| iv) இ.போ.ச. வேலைத் தளம் | 01 |

b) ரயில்வே

| | |
|---|---|
| i) ரயில் வண்டிகள் | 16 |
| ii) ரயில் பாதைகள் | 12 |
| iii) ரயில்வே ஸ்ரேசன்கள் | 24 |

**02. மின்சாரம்**

| | |
|---|---|
| i) மின்மாற்றிகள் | 132 |
| ii) பைலோன்ஸ் | 13 |
| iii) மின் கம்பிகள் | 69 |
| iv) மின் நிலையங்கள் | 02 |
| v) மின்மானிகள் | 25 |
| vi) மின்சார உப அலுவலகங்கள் | 09 |

**03. தொடர்பாடல்**

| | |
|---|---|
| i) தொலைபேசி இணைப்புக்கள் | 84 |
| ii) தபாலகங்கள் | 680 |
| iii) அஞ்சலக வாகனங்கள் | 18 |
| iv) தொலைத்தொடர்பு நிலையங்கள் | 12 |
| v) தொலைத்தொடர்பு மத்திய நிலையம் | 01 |

**04. உணவு**

| | |
|---|---|
| i) கூட்டுறவுக் கடைகள் | 16 |
| ii) கமநல சேவை மத்திய நிலையம் | 103 |
| iii) நெல் சேகரிக்கும் நிலையங்கள் | 04 |
| iv) வேளாண்மை நிலையம் | 01 |
| v) பால் சேகரிக்கும் நிலையம் | 01 |

**05. தோட்டத்துறையினர்**

| | |
|---|---|
| i) தேயிலைத் தொழிற்சாலை | 73 |
| ii) தோட்ட அலுவலங்கள் | 38 |
| iii) தோட்டத்துறை வாகனங்கள் | 02 |
| iv) தேயிலைக் கொழுந்து சேகரிக்கும் நிலையங்கள் | 02 |

**06. வங்கிகள்**

| | |
|---|---|
| i) வங்கிகள் (மாநகரம்) | 03 |
| ii) வங்கிகள் (நகரம்) | 04 |
| iii) வங்கிகள் (கிராமம்) | 31 |

**07. அரச அலுவலகங்கள்**

| | |
|---|---|
| i) கிராம சேவையாளர் அலுவலகங்கள் | 294 |
| ii) மாவட்ட அபிவிருத்தி உப அலுவலகங்கள் | 110 |
| iii) பதில் அரச அதிபர் அலுவலங்கள் | 79 |
| iv) மஜிஸ்திரேட் நீதிமன்றங்கள் | 17 |
| v) மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகங்கள் | 16 |
| vi) கிராம/நகர சபை அலுவலகங்கள் | 12 |
| vii) உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் | 08 |
| viii) கிராம அபிவிருத்தி அலுவலங்கள் | 05 |
| xi) பொது மராமரத்து அலுவலகங்கள் | 03 |
| x) வனத் திணைக்கள அலுவலகங்கள் | 03 |
| xi) காணிப் பதிவு அலுவலகம் | 01 |
| xii) அரச மருந்தகங்கள் | 02 |
| xiii) சுகாதார வைத்திய அதிகார அலுவலகங்கள் | 02 |
| xiv) மதுவரித் திணைக்கள அலுவலகம் | 01 |
| xv) நீர்வள வடிகாலமைப்பு | 02 |
| xvi) ஆற்றுப் பள்ளதாக்கு அபிவிருத்தி சபை அலுவகம் | 01 |
| xvii) ஜனபாத அலுவலகம் | 02 |
| xviii) வனவள பரிபாலன அலுவலம் | 01 |
| xix) கிராம அலுவலகம் | 01 |
| xx) ஹம்உதாவ செயலக அலுவலகம் | 01 |
| xxi) நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அதிகார சபை அலுவலங்கள் | 03 |

**08. கைத்தொழில் நிறுவனங்கள்**

| | |
|---|---|
| i) மரக் கூட்டுத்தாபன டிப்போக்கள் | 11 |
| ii) புகையிலை நிறுவனங்கள் | 07 |
| iii) வடிசாலை நிலையங்கள் | 03 |
| iv) சீனித்தொழிற்சாலைகள் | 02 |
| v) ஓட்டுத் தொழிற்சாலைகள் | 02 |
| vi) [illegible] இராசாயனத் தொழிற்சாலை | 01 |
| vii) [illegible]லைகள் | 02 |
| viii) [illegible] கட்டடங்கள் | 02 |

**09. கட்டடங்கள்**

| | |
|---|---|
| i) படையினரின் வீடுகள் | 107 |
| ii) பொலீஸாரின் வீடுகள் | 76 |
| iii) சிவிலியன்களின் வீடுகள் | 20 |
| iv) தனியார் கட்டடங்கள் | 33 |
| v) நீர்பாசனத் திணைக்களக் கட்டடங்கள் | 03 |
| vi) சர்வோதய நிலையங்கள் | 05 |
| vii) மாகாண சபை உறுப்பினர்களின் வீடுகள் | 02 |
| viii) இளைஞர்கள் சேவை நிலையங்கள் | 01 |
| ix) பொலீஸ் கட்டடங்கள் | 02 |
| x) ஊர்காவற்படையினரின் வீடு | 01 |
| xi) கலாசார முக்கோணக் கட்டடம் | 01 |
| xii) சமூக நிலையங்கள் | 03 |
| xiii) அரச பண்ணைக் கட்டடங்கள் | 02 |
| xiv) தொழிற்சங்க அலுவலகம் | 01 |
| xv) வெளிநாட்டு நிர்மாணத் திட்டம் | 01 |
| xvi) மாடி வீடுகள் | 02 |
| xvii) நிர்மாணப் பயிற்சி நிலையங்கள் | 02 |

**10. கல்வி**

| | |
|---|---|
| i) அரச பாடசாலைகள் | 08 |
| ii) கல்வி அலுவலகங்கள் | 03 |

**11. கூட்டுத்தாபனங்கள்**

| | |
|---|---|
| i) கட்டடப் பொருள் கூட்டுத்தாபன அலுவலகங்கள் | 02 |
| ii) ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபன அலுவலகங்கள் | 02 |
| iii) கஜு கூட்டுத்தாபன நிலையங்கள் | 02 |
| iv) உரக் களஞ்சியம் | 01 |

**12. வர்த்தகமும் வாணிபமும்**

| | |
|---|---|
| i) வர்த்தக நிறுவனங்கள் | 06 |
| ii) மதுபான விற்பனை நிலையங்கள் | 02 |
| iii) ஜனசவு கட்டடங்கள் | 03 |
| iv) கடற்றொழிலாளர் நிலையம் | 01 |
| v) றப்பர் பால் சேகரிக்கும் நிலையம் | 01 |
| vi) தனியார் கம்பனி | 01 |
| vii) பெற்றோல் நிலையம் | 01 |
| viii) தச்சுத் தொழிலகம் | 01 |

**13) பொதுப் பாவனைகள்**

| | |
|---|---|
| i) அரச வாகனங்கள் | 113 |
| ii) தனியார் வாகனங்கள் | 29 |

# நாடளாவிய ரீதியில் சமாதானக் குழுக்கள்

## யுத்தத்துக்கு எதிரான கூட்டணி அமைக்கிறது

கொழும்பு,ஓக.25

அரசின் சமாதான முயற்சிக்கு வலுவூட்டும் முகமாக நாட்டின் சகல பகுதிகளிலும் ஐயாயிரம் பேரைக் கொண்ட சமாதானக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விளக்கம் அளிக்கும் செய்தியாளர் மாநாடு சம்பத்தில் மருதானை பாத்திமா ஆலயத்தில் இடம்பெற்றது.

அங்கு யுத்தத்திற்கு எதிரான தேசிய கூட்டணியின் செயலாளர் வணபிதா ஒஸ்வெல் பேர்த் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'நாட்டில் உள்ள சகல இன மக்களும் யுத்தத்தை வெறுக்கிறார்கள் என்பது நாம் விஜயம் மேற்கொண்ட சகல பகுதிகளிலும் தெட்டத்தெளிவாகத் தெரிந்தது. சிலர், தமது அரசியல் சுயலாபத்திற்காக யுத்தம் செய்யவேண்டும் எனக் கூக்குரலிட்டு வருகின்றனர்.

பத்தொன்பது வருடங்களாக இந்த நாட்டுமக்கள் அனுபவித்த துன்பங்களும் பேரழிவுகளும் போதும். இனியொரு யுத்தம் தோன்றினால் அதை இந்த நாடு தாங்காது. கடந்தகால யுத்தத்தால் ஏற்பட்ட வடுக்களை இல்லாமல் செய்வதற்கே பல வருடங்களை நாம் அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. எனவே, இனியொரு யுத்தம் ஏற்படாதவகையில் நாடளாவிய ரீதியில் சமாதான இயக்கங்களை அமைத்து யுத்தவாதிகளுக்கு எதிராகச் செயற்பட நாம் தீர்மானித்துள்ளோம்.

1956ஆம் ஆண்டுமுதல் மேற்கொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதற்கு நாடளாவிய ரீதியில் சமாதானம் பற்றியும், இனங்களுக்கிடையிலான ஒற்றுமை பற்றியும் பூரண விளக்கங்கள் மக்களுக்கு அளிக்கப்படாமையே காரணமாகும். எனவே, சமாதானத்தை விரும்பும் சகல சக்திகளும் எம்முடன் ஒன்றிணைய வேண்டும்' - என அவர் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் தேசிய சமாதான இயக்க செயலாளர் பல்லேகந்த ரத்னசாரஹிமி, மதங்களுக்கிடையிலான சமாதான முன்னணியின் அமைப்பாளர் மாதம் பாகம அஸ்ஸஜி ஹிமி, செயலாளர் படல்கும்புர குணவல்ச ஹிமி, கலாநிதி குமார் ரூபசிங்க, தேசிய சமாதான முன்னணிப் பிரமுகர் எஸ்.பால கிருஷ்ணன் போன்றோர் உரையாற்றினர்.

18 அமைப்புகளைச் சேர்ந்த 110 அங்கத்தவர்கள் கடந்த 9ஆம் திகதிகூடி நாட்டில் இயங்கும் அரசசார்பற்ற அமைப்புகளின் உதவியுடன் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடிவு செய்திருப்பதாகவும் அங்கு அறிவிக்கப்பட்டது. (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள், Prima பேட்டுக் குஞ்சுகள் 05.09.2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். முதல்நாள் மருந்து இலவசம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7418)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7417)

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், Aretors மீன் தொட்டிக்கான உபகரணங்கள், மீன்களுக்கான தீவணங்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7368)

West Point double door (இரட்டைக்கதவு) No Frost System Fridge விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெ.ஆனந்தராஜா, C/o விஸ்வலிங்கம், முள்ளி ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (7421)

26 பரப்பு வயற்காணி அராலி வடக்கில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 162, அரசடி வீதி, கந்தர்மடம்.(7454)

நல்ல நிலையில் உள்ள Computer & Printrr விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பா.கோகுலன், இல. 258, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்பபாணம். (7463)

கடைப் பாவனைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.விக்னேஸ்வரன், அரசடி வீதி, கந்தர்மடம். (பழைய அங்கர் பார்மஸிக்கு அருகில்). (7460)

Gold Fish மற்றும் Tiger Pups, பிளேட்டீஸ், மீன்களும் Gini Pigs சோடியாகவும் Finchers குருவிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 169, மருத்துவபீடம் முன்பாக, திருநெல்வேலி. (7457)

Tourist INN (உல்லாசப் பயணிகள் விடுதி) Hotels (ஹோட்டல்) Dispensary (மருந்தகம்) என்பனவற்றுக்குப் பொருத்தமான 10 பரப்புக காணியுடனான மாடி வீடொன்று விற்பனைக்குள்ளது. இது யாழ் மாநகர சபை எல்லைக்கு அண்மையில் பிரபல்யமான ஒரு பிரதான வீதியில் அமைந்துள்ளது. பெறுமதி 35 இலட்சத்திற்கு மேல். தொடர்பு: விள.இல. 1612, மே/பா. உதயன். (7459)

வர்ண மீன்கள் புதியரக மாபிள் ஸ்ரார், சில்வர் ஸ்ரார், ஒஸ்கா பெரிய, சிறிய Glod Fish மற்றும் பல இன மீன்களும் அறுகோணத் தொட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 535 A, பலாலி வீதி (பெற்றோல் நிலையம் அருகில்), பரமேஸ்வராச் சந்தி யாழ்ப்பாணம். (7473)

Original Japan Sony 14" Colour T.V., Panasonic SJ3 டெக் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 29, புதிய வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (7469)

நல்ல நிலையிலுள்ள தமிழ் - ஆங்கில தட்டச்சு இயந்திரம், றோணியோ இயந்திரம் என்பன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. கிருஷ்ணராஜா, கந்தையா வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (7478)

ஓடியோ றெக்கோடிங்குக்குரிய பொருள்கள் விற்பனைக்கு உண்டு. ஓடியோ டெக், CD பிளேயர், ஓடியோ கஸெட்ஸ் (மாஸ்ரர்), Box CDகள் என்பன உண்டு. தொடர்பு: சதீஷ், 111, நாயனமார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (7466)

சுழிபுரத்தில் நெற்காணி 22பரப்பும் (சியமலை) சேர்ந்தாற் போல் 5 1/2 பரப்பு வீட்டுக் காணியும் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புக்கு திருமதி சி.தேம்பாமலர், 561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்) (7480)

[illegible]றொயிலர் இறைச்சிக் கோழிகள் [illegible]னைக்கு உண்டு. வேண்டிய [illegible]களில் தினமும் பெற்றுக் கொள்ள[illegible]. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), [illegible]ட்டப்பிராய். (7423)

## வீடுவிற்பனைக்கு

சகல வசதிகளும்கொண்ட 2 வீடுகள் 2 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: கி.கந்தசாமி, மயிலுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (C/23270)

## தவறிவிட்[illegible]

அட்டமட்டை [illegible]ச் சேர்ந்த தம்பியன் க[illegible]மூர்த்தியின் தேசிய அடையாள அட்டை (இல.480132759V), செல்லத்துரை திலகவதியின் தேசிய அடையாள அட்டையும், கணேசமூர்த்தி ஜனார்த்தனன் என்பவரது பிறப்புச் சான்றிதழும் நகைகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் அட்டமட்டை, பன்னாலை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7453)

புகைப்படங்களும் படச்சுருளும் யாழ்ப்பாணத்திற்கும் கொக்குவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நிக்கோன்ஸ் போட்டோ, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7458)

## வாடகைக்கு உண்டு

பரமேஸ்வராச் சந்திக்கும் தபால் பெட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள சகல வசதிகளுடனும கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். விவரங்களுக்கு காலை 10.00 மணிககும் மாலை 4.00 மணிக்கும் இடையில் பலாலி வீதியில் அமைந்துள்ள 118ஆம் இலக்க மேற்படி வீட்டு விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம். (7425)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும். தொழில் புரிவோருக்கு தனி வகுப்பு. ஆசிரியர் ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (7404)

## கணித வகுப்பு

தரம் 10, G.C.E. (O/L) இற்கான கணிதம் தனிப்பட்ட முறையில் மாணவரின் தரத்திற்கேற்ப கற்பிக்கப்படும். G.C.E (O/L) மாணவர்களுக்கான மீட்டலும் கற்பிக்கப்படும். தொடர்பு: 54/2, சந்தன மாதா கோயில் முன்ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (7481)

## தேவை

சமையல் வேலைகளுக்கு (ஆண்/பெண்) ஆள் தேவை. தங்கி இருக்கவேண்டும். சாப்பாடும் நல்ல சம்பளமும் தரப்படும். எல்லா வசதியும் உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழு[illegible]கை, முத்திரைச்சந்தையடி, நல்[illegible] (7367)

வயோதிப தம்பதிகளை[illegible] பராமரிப்பதற்கு ஆண்/பெண் தேவை. தங்குமிட வசதி உண்டு. தொடர்பு: R.S.மகேஸ்வரன் (அப்பாத்துரை கடை அருகில்), கே.கே.எஸ். வீதி மல்லாகம். (7455)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், இங்கிலாந்துப் பிரஜை, கணனியில் இங்கிலாந்து அரசாங்க சான்றிதழ் பெற்றவர், வங்கி முகவர், வயது 42 திடகாத்திர தேகம் உடையவர் விசாரிப்பதற்கு இங்கிலாந்து விலாசம் தரப்படும். விரைவில் விவாகம் யாழ்ப்பாணத்தில். முதற் கடிதத்தில் முழுவிவரம் வேண்டும். தொடர்பு: விளம்பர இல. 1608, மே/பா உதயன். (7273)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ரேவதி நட்சத்திரம், லண்டனில் நெற்வேக் பொறியியலாளராகவும் சொந்தமாகத் தொழில் ஸ்தாபனம் நடத்தும் மணமகனுக்கு 27 வயதுக்குட்பட்ட கல்வியறிவுள்ள அழகிய மணமகள் தேவை. தொடர்பு:ஸ்ரீ லக்ஷ்மி திருமண சேவை, 50-2-2 றெக்கிளமேசன் வீதி, கென்றிக் கட்டடம், புறக்கோட்டை, கொழும்பு -11 T.P.: 446125, 932742, Fax 932742. (7230)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுடைய விசாகம் 3ஆம் பாதம் உடைய தற்போது இலங்கை வந்துள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. குறிப்பு, புகைப்படம் முதலிய விவரங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்: ப.கிருஷ்ணமூர்த்தி, 114/19 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் T.P: 2789 (7471)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந் 1970ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரம் 2இல் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு கனடா, சுவிஸ், லண்டன பிரஜாவுரிமை உடைய மணமகன் தேவை. தொடர்பு: ஏ.குணவதி, 105/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (பெந்தகோஸ்க்கு அருகில்) (7487)


கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம்

**கண்ணா கற்பூரம்**

நல்லூர்க் கந்தன் அருள்பெற அன்பர்கள்,
வாடிக்கையாளர்களை வாழ்த்துகின்றோம்.

**SEAMAICE Co.,**
No.654/14 Industrial Estate, Ratmalana
Tel.: 624588 ... 591218


## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பங்களை 09.09.2002ஆம் திதிக்கு முன்னர் **"பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு, பரிஷ் ப.நோ.கூ. சங்கம், பண்டத்தரிப்பு"** என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**லொறி சுத்திகரிப்பாளர் 314: 16**
**வெற்றிடம் - 01**
**சம்பளத்திட்டம்: 3250 - 60X10 -65X10 4500**
**தகைமைகள்:** கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஐந்தாம் வகுப்பு கல்வித் தராதரப் பத்திரமும், சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு. (C-23281)

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

இந்திய ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், காதல் தோல்வியா? கல்வியில் தடையா? திருமணப் பிரச்சனையா? வெளிநாடு செல்லத்தடையா? குழந்தைச் செல்வம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? தொழில் பிரச்சினையா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரமூலம் தீர்வுகாணலாம். சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள். வியாழன் விடுமுறை.

**மணிசாமி சாமி**
யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி,
இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்தி அருகில்)

## திருகோணமலையில் காணி விற்பனைக்கு

திருகோணமலை, அலஸ் தோட்டம், மூன்றாம் கட்டையில், பிரதான வீதியில் 330 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு.

மேலதிக விவரங்களுக்கு,
தொலைபேசி இலக்கம்:
074-200600
அல்லது 077-799646
(C/23372)

# TENDER NOTICE

**MINISTRY OF HOUSING AND PLANTATION INFRASTRUCTURE**
**DEPARTMENT OF BUILDINGS**

1. **The Chair person, Tender Board, Ministry of Housing and Plantation Infrastructure**, will receive sealed tenders for **Construction of Proposed Post Office Building Jaffna - Phase II.** (Architectural Finishes and Services Installation) upto 10.00 a.m. on 19-09-2002.
2. Tender forms are available for purchase with Chief Engineer **(Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna upto 3.30 p.m. on 13-09-2002** on payment of non refundable tender fee of Rupees One Thousand (Rs.1000.00) only. Belated callers will be charged additionally, a late fee of Rupees Three Hundred (Rs.300.00) only, for each day of delay, prior to issue of tender documents.
3. Tenders will be opened immediately after the closing at the **conference room B of the Ministry of Housing and Plantation Infrastructure, Second Floor, Sethsiripaya, Battaramulla.** Tenderers or their authorized representative are requested to be present at the opening of tenders.
4. Tender forms will be issued only to Contractors registered as Building Construction Contractors under the scheme of National Registration and Grading of Construction Contractors developed by Institute for Construction Training and Development (ICTAD) for Grade M 05 and above having membership of the National Construction Contractors Association of SriLanka (NCCASL). The Contractors Record Book and the membership card of the NCCASL must be produced by the applicant before Tender Documents are issued to him.
5. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to the Chairperson, **Ministry Tender Boa[illegible], C/o Director (Works), Ministry of Housing and Plantation Infrastructure, "Sethsiripaya", Sri Jayewardenepura, Kotte, Battaramulla** to receive before closing time.
6. Tenderers are advised that no late bids will be accepted and they should enter **"Sethsiripaya"** Premises at least 1 hour before the scheduled time for tender closing, due to security checking.
7. Tender documents may be inspected free of charge, and any further details could be obtained from **Chief Engineer (Jaffna), Department of Buildings, Jaffna.**

**A.D.Wickramasinghe,**
**Director of Buildings,**
**Department of Buildings.**
**"Sethsiripaya"**
**Sri Jayewardenepura**
**Kotte,**
**B[illegible]ttaramulla.** (C/23275)

## மரண அறிவித்தல்

### திருமதி கன்னையா காந்திமதி

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணையா காந்திமதி அவர்கள் 23.08.2002 வெள்ளிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற மருதப்பு தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மருதப்பு கண்ணையாவின் அன்பு மனைவியும், தவமணி, புஸ்பராணி, கிருசாம்பாள்(பிரான்ஸ்), புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரன்(கண்ணன்-மாகோ ஸ்ரோர்ஸ்), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற காராளசிங்கம், காலஞ்சென்ற கனகலிங்கம், கனகசுந்தரம்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சண்முகலிங்கம், சந்திராதேவி, ராமச்சந்திரன்(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பராசக்தி, சிவக்கொழுந்து, கற்பகம், காலஞ்சென்ற மயில்வாகனம், காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரெட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பொரளை கனத்தை மயானத்தில் இன்று (25.08.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஜெகதீஸ்வரன்
(மகன்)

*மாகோ களஞ்சியம்,*
*யாழ்ப்பாணம்.* (7445)

# சந்திரிகாவின் சத்தியத்தை ஏற்க நாம் தயாரில்லை!

## அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு,ஓக.25

'நாடாளுமன்றத்தைத் தற்போது கலைக்கமாட்டேன்' என்று குறிப்பிட்டு ஜனாதிபதி சந்திரிகா, சபாநாயகருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதனை அரசினால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவைத தீர்மானங்களை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

'தன்னிச்சையாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை நீக்குவது என்ற அரசின முடிவில் எந்த மாற்றமும் இல்லை. இருகட்சிகளுக்கிடையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்று நாம் ஏற்கனவே கூறியுள்ளோம்.

அரசமைப்பில் செய்யப்படவுள்ள சில திருத்தங்கள் தொடர்பாக அமைச்சரவை சில தீர்மானங்களை எடுத்துள்ளது. இதற்கமைய நாடாளுமன்ற ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும். அக்குழுவை சபாநாயகர் கட்சி வேறுபாடின்றி அமைப்பார். நாட்டில் உள்ள தேசியப் பிரச்சினைகளை அக்குழு கண்டறிந்து அறிவிக்கும். அப்பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கப்படும் சட்ட மூலங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்கமுடியும்.

நாடாளுமன்றத்திற்கு பிரதமர்மீது நம்பிக்கை இருக்கும்வரை ஜனாதிபதி தன்விருப்பப்படி நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியாத வகையில் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்படும்.

இந்தச் சட்டத்திருத்தங்களுக்கு ஆதரவளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தவிதத்திலும் அவர்களது கட்சிகளால் நிர்ப்பந்திக்கப்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவை தொடர்பான நகல் சட்டமூலம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு பின்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பிரதமருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருப்பதை உறுதிப்படுத்த எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பொன்று நடத்தப்படும். அதில் நாம் வெற்றி அடைவோம் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

இதற்கிடையே, ஜனாதிபதி நாடு திரும்பும்வரை அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் தொடர்பாக முடிவுகளை எடுக்கவேண்டாம் என்ற கோரிக்கையை ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலபட்ட பெண்டி கடிதம்மூலம் அமைச்சரவைச் செயலாளர் வேரகொடவிற்கு அனுப்பியுள்ளார்.

அதில் ஜனாதிபதி எப்போது நாடு திரும்புவார் என்பது குறிப்பிடப்படவில்லை. எனவே, அத்தகைய ஒரு கடிதத்துக்காக நாம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கையைத் தள்ளிப்போடமுடியாது - இவ்வாறு பேராசிரியர் பீரிஸ் கூறினார். (ஒ)

# மந்துவில் கிழக்கில் குடியேற அனுமதியளிக்கக் கோரிக்கை

## யாழ்.அரச அதிபருக்குக் கடிதம்

தென்மராட்சி,ஓக.25

மந்துவில் கிழக்குப் பகுதியில் இன்னமும் படையினர் வெளியேறாததால் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்கள், படையினரை வெளியேற்றித் தம்மை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபரைக் கடிதம்மூலம் கோரியுள்ளன.

மேற்படி குடும்பங்களின் தலைவர்கள் கையெழுத்திட்டு யாழ்.அரச அதிபருக்கு அனுப்பப்பட்ட அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2002ஆம் ஆண்டு மேமாதம் தென மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக நாங்கள் எங்கள் வதிவிடங்களைவிட்டு இடம் பெயர்ந்தோம் இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் எமது பகுதி மக்கள் தத்தம் வதிவிடங்களுக்குச் சென்று மீளக்குடியமர்கின்றார்கள். ஆனால், 25 குடும்பங்களைச் சேர்ந்த எங்களுக்கு அந்த வாய்ப்பு இதுவரை கிடைக்கவில்லை.

மிகவும் வறியவர்களாகிய நாங்கள் முன்னர் எங்கள் நிலங்களிலுள்ள பயிர் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்திவந்தோம்.

ஆனால், தற்போது இராணுவம் எமது வீடுகள் மற்றும் காணிகளில் நிலைகொண்டுள்ளதால், நாங்கள் அங்கு செல்லமுடியாதுள்ளது. அதனால் நாங்கள் எமது நாளாந்த வாழ்க்கைக்கு எதுவித வருமானமும் பெறமுடியாமல் உள்ளோம்.

குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த குடிமக்களாகிய நாங்கள் மேற்கூறப்பட்டுள்ள காரணங்களால் சொல்ல முடியாத துயரங்களை அனுபவிக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலையில், இன்னும் அகதிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எனவே, எங்கள் நெருக்கடி நிலைமையைத் தங்கள் கவனத்தில் எடுத்து, நாங்கள் எமது சொந்த வதிவிடங்களில் மீளக்குடியமர்வதற்கு ஆவன செய்து தருமாறு பணிவுடன் வேண்டுகிறோம் என்றுள்ளது.

(ஒ-117)

# தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பு லண்டனில் அங்குரார்ப்பணம்

லண்டன்,ஓக.25

ஐரோப்பிய தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு இன்று லண்டனில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் சென்னையில் தமிழர் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரமைப்பின் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே இந்தக் கூட்டமைப்பு அமைக்கப்படவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்களை ஒன்றிணைக்கும் முதல் முயற்சியாகவும், ஐரோப்பியத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பை உருவாக்கும் ஆரம்பக் கட்டமாகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் ஐரோப்பிய நாடுகளில் வாழும் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின் இறுதியில் தமிழர் தலைவர் பழ.நெடுமாறன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் சுப.வீரபாண்டியன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்படவுள்ளது.

இக்கூட்டமைப்பு அங்குரார்ப்பணக் கூட்டம் லண்டன், ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-10)

# கால்நடை பராமரிப்பு பயிற்சி வகுப்பு

வலிகாமம் தெற்கு,ஓக.25

சண்டிலிப்பாய் கால்நடை மருத்துவர் அலுவலகப் பிரிவில் ஆடு, மாடு, கோழிகள் வளர்த்தல், பராமரித்தல், நோய்த்தடுப்பு முறைகள் ஆகியவை தொடர்பான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விரும்பும் பண்ணையாளர்கள் கால்நடை மருத்துவ அலுவலகத்தில் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற பொது அமைப்புக்கள் ஏற்பாடுசெய்யும் பட்சத்தில் அந்த இடங்களிலும் இத்தகைய பயிற்சி வகுப்புகளை நடத்தமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-152)

# தூயமனம் பெறுவோம்

இன்று உலகில் வாழ்கின்ற மனிதர்கள், தமக்கிடையே போட்டி பொறாமையுடையவர்களாக, அதிகார வெறிபிடித்தவர்களாக இருக்கின்றார்கள் என்பது வேதனை தரும் செய்தியாகும். மனிதனை மனிதன் மன்னிக்கமுடியாமையே மறைமுக யுத்தங்களும், மாபாதகங்களும் நிலவக் காரணமாக இருக்கின்றது.

### ஞாயிறுநற்பிரசாதம்

"மற்ற மனிதர் செய்யும குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும உங்களை மன்னிப்பார். மற்றவரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் திட்டங்களை மன்னிக்க மாட்டார். (மத்6:14) என்று இயேசு போதித்தார்.

எம்மிடையே அன்புறவு மலரவேண்டுமென்றால் மன்னிப்பு என்ற பெருமனது எம்மிடம் இருக்கவேண்டும். தண்டனை என்பது எமக்குரிய தொன்றல்ல. தண்டிக்கும் உரிமை இறைவனுக்கு மட்டுமே உண்டு. அப்படியென்றால் தீமைசெய்வோரை விட்டு விடுவதா? என்ற கேள்வி எழலாம். வேண்டுமென்று செய்பவர்களைச் சட்டம் தண்டிக்கும். அறியாமற் செயபவர்களை நாம் மன்னிக்கவே வேணடும். சிறிய சிறிய பிரச்சினைகளையெல்லாம் நாம் பெரிதுபடுத்துவதாலேயே மற்றவர்களை எம்மால் மன்னிக்க முடிவதில்லை. கோபமும் பொறாமையும் மனிதனை கொடூரச் செயல்களைச் செய்யவும் தூண்டுகின்றன. எமது ரத்த நாளங்கள் கொதிப்படைந்து தளர்ந்துபோகின்றன. இலகுவாக நாம் இயலாதவர்களாகிவிடுகின்றோம். இவற்றிற்குக்காரணம் மன்னிக்க முடியாமையே.

எம் உறவுகள், அயலவர் செய்த குற்றங்களை மன்னிக்கமுடியாத நாம் கோயிலுக்கு காணிக்கை கொடுககினறோம். தர்மஸ்தாபனங்களுக்கு உதவி செய்கின்றோம். புனித இடங்களுக்கு யாத்திரை செல்கின்றோம். ஆனால், இறுதிநாளில் இறைவனின் தண்டனைத் தீர்ப்பு எம்மைத் தொடரவே செய்யும். கண்ணால் காணும் தன் சகோதரனை மன்னிக்காதவன் காண முடியாத இறைவனிடம் இருந்து எப்படி மன்னிப்பைப் பெற்றுக்கொள்வான்.

எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் ஆன்மீகம் இல்லாத நிலையே.

**அருட்சகோதரர்**
**அன்ரனிபீற்றர்**

பொழுதுபோக்கிற்கும், பெருமைக்கும் ஆலய தரிசனங்கள் இடம்பெறுவதால் இறைதண்டனை எல்லோர் மேலும் விழுகின்றது. இவற்றின் எதிரொலியே சமாதானம் இல்லாத நிலையாகும். எனவே இறைவனின் கருணையைப் பெறத்தகுந்த ஆயத்தத்துடனும் தூய மனநிறைவுடனும் ஆண்டவனை நாடிச் செல்வோம். வற்றாத ஊற்றாக அவன் அருள் எம்மேல் சுரக்கும். ★

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(13ஆம் திருவிழா)



## நல்லூரான் நமக்குத் துணை

பக்கம் இரு பாவையரோடு நிற்கும்
அழகினில் நினைவது சொக்க,
சொக்கர் மகன் சுந்தர வேலனை பணிந்தாலே
இச்செகமதில் அச்சமின்றி
எச்செயலும் உச்சமதாகி
மெச்சும்படி வாழ்வதற்கு அருள்வானே!

சிந்தத்தில் நித்தம் வைத்து
தித்திக்கும் முத்தமிழ் கொண்டு
அத்தன்மகன் அருளை நாளும் நீ நாடு
அல்லும் பகல் அவன் பெயர் சொல்ல
அல்லல்கள் அறுப்பான் வல்ல
நல்லூரான் நமக்குத் துணையிதை அறிவாயே.

பா.சிவபாலன்

## அள்ளிச் சொரி அருளை!

வண்ணமயிலேறி வலம்வரும் நல்லைக்கந்தா
திண்ணமாகவே எமைக்காப்பாய் - உனைக்காண
வெள்ளமாகவரும் பல்லின அடியார்க்கு
அள்ளிச் சொரி அருளை.

- குகதாசசர்மா சிவகுமார்

## பொற்பாதம் போற்றி

தில்லையம் பதியைக் கொண்ட
திருநடன் தந்த பாலன்
நல்லையம் பதியி லாடும்
நாதனே குமர வேளே
கல்லையும் கனிய வைக்கும்
கதிரன் வடிவேல் வீரா
தொல்லைகள் நீக்கும் உந்தன்
தூயபொற் பாதம் போற்றி

சி.சக்திகிரீவன்.

## வழிகாட்டும் நல்லூர்

திருகு துன்பங்கள் தீராத நோய்கள்
தீர வாருங்கள் நல்லைக்கு,
தெள்ளு தமிழாலே சொல்லிப் பாடுங்கள்
திரு முருகனின் அருள் கிடைக்கும்

பக்தியொடு தூய மனதோடு
வல்ல முருகனை அருச்சித்து
வாடிப் பாடினால் தேடி வருவானே
வாழ வழிகாட்டும் நல்லூரான்.

கே.எஸ்.சிவஞானராஜா

## சுடர் வடிவேல் நல்லையாளுது

வடிவேல் அழகன் உலா வருகின்றான்
வல் வினைகள் அழிக்கவே வலம் வருகின்றான்.
தொல்லையகற்றவே பவனி வருகின்றான்.
பாடிப் பரவிடுமடியார் எண்ணமதில் குடியேறுகின்றான்.

நல்லைப் பதியில் நல் விழா நடக்குது
நம்மின வாழ்வு நனி சிறக்குது
சொல்லுமடியார் குறைகள் அழியுது
சுடர் வடிவேல் நல்லையாளுது.

- வேலணை பாலா

## காத்து அருள் தருவான்

கோலமயில் ஏறுகின்ற குமரன்
கோயிலுள்ள நல்லை நகர் செல்வோம்
காலமெல்லாம் தொடருகின்ற துயர்கள் யாவும்
களைந்திடவே அவன்பாதம் தொழுவோம்
பாலவடிவான எங்கள் முருகன்
பக்தரெமைக் காத்து அருள்தருவான்

- எம்.எம்.குமார்

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி ம.சுபாசினியின் அருமைத் தந்தை

### சின்னத்தம்பி மகாலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம். மதுபாரத கல்வி நிறுவன 2003 கலைப்பிரிவு மாணவ, மாணவிகள். (7487)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆயுள்கால அங்கத்தவரும், நிர்வாகசபை உறுப்பினருமான திரு.இ.தவகோபால் அவர்களின் அன்பு மனைவி

### திருமதி த.தேவராணி

அவர்களின் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைகின்றோம். பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். (7479) - சைவபரிபாலன சபை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 1932 - 12 - 23



உதிர்வு 2002 - 07 - 27

### திருமதி இரத்தினவேலு தங்கரத்தினம்

(பூவண்ணன்)

(பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கற்கோவளத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

*எம்மை இம் மண்ணில் புகழ்பெறச் செய்தவரே!*
*என்றென்றும் நாம் வாழ எமதுயிராய் நின்றவரே!*
*நிம்மதியாய் நீர்வாழ நாமுயர்ந்து நின்றவேளை*
*எம் கரங்கள் பொருளோடு புகழ்தேடி உமைக்காக்க நின்றவேளை*
*அத்தனையும் வெறுத்துவிட்டு ஏன் அம்மா சென்றீர்கள்?*
*இத்தனைக்கும் உமது பதில் புன்னகை ஒன்று தானோ?*

அன்னார் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு உதவிகள் புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் நேரில் வந்தும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றி.

நாளை (26..08. 2002) திங்கட்கிழமை நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: இ.குகதாஸ் (மகன்), கற்கோவளம், பருத்தித்துறை (7476) - மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் தவணை நாளை ஆரம்பம்

வலிகாமம் தெற்கு,ஒக.25

அரசாங்க பாடசாலைகள் அனைத்தும் இவ்வருடம் மூன்றாம் தவணை செயற்பாட்டுக்காக நாளை திங்கட்கிழமைமுதல் திறக்கப்படவுள்ளன. (ஒ-152)

## வத்திக்கான் வானொலி அதிகாரி இலங்கை விஜயம்

யாழ்ப்பாணம்,ஒக.25

வத்திக்கான் நகரில் இருந்து ஒலிபரப்பாகும் வத்திக்கான வானொலியின் தமிழ்ப் பிரிவின் தெற்காசியப் பகுதிப் பொறுப்பான அருட்திரு. அல்பி பென் அடிகள் நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

வத்திக்கான் வானொலி பற்றிய கருத்துக்களை அறிந்துகொள்ளும் நோக்குடன் இலங்கைக்கு வரும் இவர் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார்.

வத்திக்கான் வானொலியின் இலங்கைத் தமிழ்ப் பிரதேசப் பொறுப்பாளர் அருட்திரு.ரீ.ஜெறிபெல் கிருபாகரன், தெற்காசியப் பிரிவுப் பொறுப்பாளர் யாழ்.வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (ஒ-8)

## உடுவில் பகுதியில் புகை நாற்றத்தால் மக்கள் சிரமம்

சுன்னாகம்,ஒக.25

உடுவிலில் குடியிருப்புப் பகுதியில் 'தார்' உருக்கப்படுவதாகவும்- இதனால், எழும் துர்நாற்றம் மற்றும் புகையினால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள காணியில் வைத்து தாரை உருக்க பழைய ரயர்கள் எரிக்கப்படுகின்றன. இதனால் எழும்புகை சுகாதாரத்துக்குக் கேடானதாக உள்ளது.

இதுதொடர்பாக பலமுறை எடுத்துக் கூறப்பட்டபோதும் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ந்தும் இச்செயலில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-27)

## தேவை

கொம்பியூட்டர் ரைப்செற்றிங் தெரிந்த பெண்கள் தேவை. நேரில் வரவும்.

"சாந்தி கவுன்சிசார் சேவைகள்"
150, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். (7462)

## கார்கள் விற்பனைக்கு

TOYOTA CORONA ரக கார்கள் விற்பனைக்குள்ளது. 15 - தொடர் இலக்க (AT-150) ரக பெற்றோல் காரும் 64-தொடர் இலக்க (CT-170) ரக டீசல் காரும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 - 364245
235 (83), பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7456)

## 3ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்

உ. அஸ்வத்



25 - 08 - 2002

செல்வன் உ.அஸ்வத்

அஸ்வத் தனது 3ஆவது பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் இன்று (25.08.2002) ஞாயிற்றுக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை மாமா, கொழும்பிலுள்ள பற்றிமா பெரியம்மா, அன்ரிமார், மச்சாள்மார், ஞானப்பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

60/1, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (7468) அ.றோய் (தாதா-மாமா)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றுவரும் உற்சவகால இசையரங்கத்தில் இன்று இசை வழங்கவிருக்கும்

### கலா. செல்வி பரமேஸ்வரி கணேசன்

(விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்களைப் பாராட்டுவதுடன் இசையரங்கம் சிறப்பாக அமைய நல்லூர்க் கந்தனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். - இசை ரசிகர்கள். (0723290)

## மரண அறிவித்தல்கள்

### கதிர்காமு செல்லத்துரை

பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிர்காமு செல்லத்துரை அவர்கள் நேற்று (24.08.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் தவமலர், செல்வமலர், அரியதேவி, கந்தசாமி (இத்தாலி) ஆகியோரின் தந்தையும் இரத்தினசிங்கம் (C.T.B), கந்தையா, தேவகுருநாதன், ஜீவராணி ஆகியோரின் மாமனாரும் கோகுலரங்கன் (ஆசிரியர், அச்செழு சைவப்பிரகாச வித்தி.), கோகுலரமணன் (இத்தாலி), கோகுலராகவன் (ஆசிரியர், சோரன்பற்று கணேசா வித்தி.), அஜந்தா, கீர்த்தனன், விஜியழ் (ஆசிரியை), பகீரதி ஆகியோரின் பேரனும் கானதியின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.08.2002 செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மணற்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோப்பளை மேற்கு, பளை. (7477) தகவல்: இ.கோகுலராகவன் (பேரன்)

### திருமதி தவமணி திருஞானம் (தவம்)

(வட்டுக்கோட்டை, அவுஸ்திரேலியா)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரான திருமதி. தவமணி (தவம்) திருஞானம் அவர்கள் அவுஸ்திரேலியா 'பார்வின் நகரில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி திருஞானம் அவர்களின் அருமை மனைவியும் செல்வரத்தினம் (அவுஸ்திரேலியா), இரத்தினேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி - பாரிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி கோமளதேவி செல்வரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை, அவுஸ்திரேலியா), இரத்தினம் கந்தசாமி (இயக்குநர், RADIO ASIA செய்திப்பிரிவு, T.T.N. தமிழ் தொலைக்காட்சி இணையம் - பாரிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஐங்கரனின் (அவுஸ்திரேலியா) அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற செல்லப்பா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லக்கண்ணு சுப்பிரமணியம், காலஞ்சென்ற சரஸ்வதி கந்தையா ஆகியோரின் அருமைச் சகோதரியும் அருளானந்தகணேசன் (லண்டன்) அவர்களின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (26.08.2002) திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி
T.P.: 0033148850127 (பாரிஸ்)

தகவல்:
செல்வரத்தினம் (அவுஸ்திரேலியா)
T.P.: 0061889271132 (0723289)

## முதலாம் ஆண்டில் முகிழ்க்கும் நினைவுகள்

மலர்வு 28 - 05 - 1934



உதிர்வு 05 - 09 - 2001

### அமரர் கார்த்திகேசு இரத்தினம் (புங்கை நகர்)

மாண்போடு வாழ்ந்திருந்த மாதா.

*காண்போரின் நெஞ்சமெலாம் களிப்புற்றோங்க,*
*கண்யமனை மக்களோடு உற்றம் சுற்றம்*
*மாண்போடு வாழ்ந்திருந்த மாதா வான*
*மங்கையளே கார்த்திகேசு இரத்தி னம்மா*
*ஆண்டோடிப் போனாலும் அம்மா உன்னை*
*அகிலத்தில் மறப்போமா தாயே நீயும்*
*மீண்டோடி வந்திங்கு மலர்ந்தே வாழ*
*மிகுவழிகள் காட்டாயோ மீளும் சாந்தி!*

இல.143, சிவப்பிரகாசம் றோட், யாழ்ப்பாணம். (7464) - குடும்பத்தினர்.

## வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சிதேர்தல் தேவையற்றதாம்

கொழும்பு,ஓக.25

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை ஏற்படுத்தப்படவுள்ளதால் அப்பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்துவது தேவையற்றது என்று லிபரல் அமைப்பின் பணிப்பாளர் இவஸ்லி ரொட்றிகோ தெரிவித்துள்ளார்

தற்பொழுது இந்தத் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்று குறிப்பிட்டுள்ள ரொட்றிகோ நாடாளுமன்றில் சட்டத் திருத்தத்தின் மூலம் தேர்தலை ஒத்திவைப்பதனால் சுமார் ஒருகோடி ரூபாவை மீதப்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

(ஓ-10)

## மிதிவெடியில் சிக்கி காயம்!

சாவகச்சேரி கெருடாவில் பகுதி வயல் துப்பரவுசெய்யச் சென்ற விவசாயி மிதிவெடியில் அகப்பட்டு படுகாயமடைந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை விநாசித்தம்பி (வயது 71) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமையும் இப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்ட சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்தமை தெரிந்ததே.

கெருடாவில் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களாக ஏழுபேர் மிதிவெடியில் அகப்பட்டதுடன் இருவர் பலியானமை குறிப்பிடத்தக்கது.(ஓ-117)


சொலெக்ஸ் & லக்ஷறி

மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டும் நிலையமும்

☆ உங்கள் கண்களைப் பரிசோதித்து முக அமைப்புக்கேற்ப கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும் -
☆ விழி இழந்தவர்களுக்கு சொந்தக் கண்களின் தோற்றத்திற்கு நிகரான மாபிள் கண்களைப் பெற்றுக்கொள்ளவும் -
மற்றும்
☆ மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து 3 மாதத்திற்குள் சீர்செய்து கொள்ளவும் -
☆ முத்துப்போன்ற சங்குப்பற்களை மிகவிரைவாகக் கட்டிக்கொள்ளவும்

நாடுங்கள்

SOLAX OPTICAL LUXURY DENTAL WORK

(பழைய பிரதேச செயலகம் முன்பாக)

232A, கண்டி வீதி, சாவகச்சேரி.

(C/23292)



VESTA

உடனடி வேலைவாய்ப்பு

எமது தொழிற்சாலையில் வேலைசெய்ய பெண் வேலையாளர்கள் உடன் தேவை.

நாளை (26-08-2002) திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

நவாலி, கொக்குவில், மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டையில் வசிப்பவர்கட்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

வெஸ்ரா இன்டஸ்ரீஸ்,
குளப்பிட்டி றோட்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(7507)



உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்

பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

முருகன் அடியார்களே!

நாளை (26-08-2002) திங்கட்கிழமை காலை 7.15 முதல் 7.33 வரையான சுபமுகூர்த்தத்தில் முருகப்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்குக் கிரியைகள் ஆரம்பமாகும்.

பாலஸ்தாபன குரு: பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக்குருக்கள்
ஆலய பிரதமகுரு: பிரம்மஸ்ரீ இ.கலாராசக் குருக்கள்

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

- ஆலய பரிபாலன சபையினர்.

(7500)



GREAT OPPORTUNITY FOR JAFFNA STUDENTS TO STUDY IN UK

Degrees and Post Graduate Degrees, Computing, Information Technology, Accounting and Finance, E-Commerce and Many more.

U.K. Representative is available till
02-09-2002
at No.06, Illanthaikulam Road,
Colombagam, Jaffna.
Appointments can be made between
11.00 a.m. to 2.00 p.m.
On T.P.:- 021-3318.

(7474)


## விளையாட்டுப்போட்டி

கரணவாய் மேற்கு மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் 10 ஆவது ஆண்டு விளையாட்டுப் போட்டி இன்று பி.ப. 1.00 மணிக்கு கரணவாய் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

திருமதி சுகந்தி நித்தியானந்தராசா தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவிற்கு பிரதமவிருந்தினராக எஸ்.தில்லைநாதனும் கௌரவ விருந்தினராக விடுதலைப்புலிகளின் அரசியல்துறை வடமராட்சிப் பொறுப்பாளர் தயா, கரணவாய் ம.வி. அதிபர் என். நற்குணலிங்கம், ஆரம்பப் பிள்ளைப்பருவ முன்பள்ளிக் கரவெட்டிக் கல்விப்பணிப்பாளர் ரி.சத்தியசீலன் ஆகியோரும் பங்குபற்றுகின்றனர். (ம-70)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.25

கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 39வது வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தலைவர் வே.பாஸ்கரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் கழகத்தின் மூத்த உறுப்பினர் கே.தங்கவடிவேல் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்குவார். (ம-ரி-70)

☆ ☆ ☆

மானிப்பாய் கிழக்கு பாரதி சன சமூக நிலையத்தின் பாரதி பாலர் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாரதி பாலர் கல்வி பூங்கா முன்றிலில் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் சர்வோதய திட்ட நிறைவேற்றுநர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-ரி)

## இலவச மருத்துவ முகாம்

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய ஆதரவில் உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாமும், கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இன்று காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளன. (ம-ரி)


SHAMROCK
J/ஈச்சமோட்டை வீதி
A/L 2003
Day Class
ஆரம்பம்:
27-08-2002 (செவ்.) 3p.m.
Com. - Mr. பசில் B.B.A.
Acc. - Mr. தவா B.com (Hons)Acc.(Spl)
☆ Gr. 3 முதல் O/L வரை
☆ விஞ்ஞானம், கணிதம் விசேட வகுப்புகள்.



லக்ஷ்மி இணுவில்
அர்ஜுன், சாக்ஷி, செந்தில், வினீத், திவ்யா உன்னி, கவுண்டமணி
வேதம் (ரிலீஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே.)



நிறஞ்சனாஸ் சங்கானை
பேபி ஷாலினி, நிழல்கள் ரவி நடித்த
சிவசக்தி (ரிலீஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)



ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ரஜனிகாந், மனிஷா, கவுண்டமணி நடித்த
பாபா
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
பல வருடங்களுக்குப் பின்னர் இரவு 9.30 மணிக் காட்சி ஆரம்பமாகியுள்ளது.



நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஜோதிகா நடித்த
குஷி (ரிலீஸ்)
தினசரி : 11.00, 3.00
சனி,ஞாயிறு 11.00, 3.00, 6.30 (பு.நே)
தரிப்பிடம் சில தினங்கள் மட்டும்.


## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.25

நல்லூர் ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலயச்சூழலில் இடம்பெற்றுவரும் நிகழ்ச்சிகளில் இன்று நடைபெறும் நிகழ்வுகளின் விவரம் வருமாறு:-

★ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை 5 மணிக்கு திருமுறை வீதிப் பஜனையும் குருமூர்த்தி ஆலயத்தில் விசேட தீபாராதனை வழிபாடுகளும் நடைபெறும். காலை 9மணிக்கு சமய தீட்சை வழங்கப்படும். தொடர்ந்து புராண படனம் நடைபெறும்.

★ வடபிராந்திய இந்து சமயப் பேரவை ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெறும் தெய்வீக இசைச் சொற்பொழிவில் மாலை 6 மணிக்கு 'தமிழ் மந்திரம்' என்ற தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் அதிபர் சிவமகாலிங்கத்தின் உரை இடம்பெறும்.

★ அகில இலங்கை கம்பன் கழகத்தால் கம்பன் கோட்டத்தில் இன்று மாலை 6 மணிக்கு நடத்தப்படும் தெய்வீகச் சொற்பொழிவில் 'குறள் காட்டும் நெறி' என்ற தலைப்பில் எஸ். செந்தூர்செல்வன் உரை நிகழ்த்துவார்.

★ துர்க்கா மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசை ஆராதனை நிகழ்வில் மாலை 6.30 மணிக்கு பரமேஸ்வரி கணேசனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். அணிசேர் கலைஞர்களாக வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - கே. கண்ணதாஸன், கெஞ்சிரா - எஸ்.சண்முகசுந்தரம், முகர்சிங் - வி.ரமணன் ஆகியோர் இடம்பெறுவர்.

★ நல்லூர் சைவ மகாசபையினரால் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் மாலை 5.45 மணிக்கு 'குருகுலவாசம்' என்ற தலைப்பில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்தசர்மாவின் கதாப்பிரசங்கம் நடைபெறும். (ம-ரி-86)

## நூலக விஞ்ஞான கற்கை நெறி

யாழ். மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவில் நூலக விஞ்ஞான கற்கைநெறி ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் - தகுதியுள்ளவர்கள் விண்ணப்பப்படிவங்களை கல்லூரியில் நாளைமுதல் பெற்று விண்ணப்பிக்குமாறும் - கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார் (ஓ)

## பஸ்கள் மோதி குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.25

ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்த இரண்டு பஸ்கள் மோதிக்கொண்டதில் அதில் பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 7.15 மணியளவில் சிறுப்பிட்டிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த 750 ஆம் மற்றும் 764 ஆம் பாதை இலக்க பஸ்களே மோதிக்கொண்டன.

முன்னால் வந்துகொண்டிருந்த பஸ் எதிரே வந்த காருக்கு வழிவிடுவதற்காக வேகத்தைக் குறைத்தபொழுது பின்னால்வந்த பஸ் அதனுடன் மோதிக்கொண்டதிலேயே வளலாயைச் சேர்ந்த வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் ஊழியரான பொன்னையா சிவராசா (வயது 52) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

- என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தினால் அப்பகுதி ஊடான போக்குவரத்துக்கள் சுமார் இரு மணித்தியாலங்கள் தடைப்பட்டது. பின் போக்குவரத்துக்கள்யாவும் இராஜவீதியூடாக இடம்பெற்றன.

(ம-10-15-ரி)

## பிரிவுத்துயர் பகிர்கின்றோம்



செல்வி கந்தவனம் தர்ஷிகா
(தர்ஷி)

மண் மகிழ 25-03-1990 — கண் நெகிழ 24-08-2002

வரப்புயர நீருயரும் என்ற வகையில்
எவ்வழி நல்வழியோ அவ்வழியை
தம் வழியாகக் கொண்டு வையத்துள்
வாழ்வாங்கு வாழ்வது மட்டுமன்றி
மற்றவர்களையும் வாழ வைக்கும்
குடும்பத்தின் செல்வக் குலக்கொழுந்தின்
திடீர் மறைவால் துயரில் மூழ்கியுள்ள
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைவதாக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நவாலி தெற்கு, நவாலி. (7506) - கலைமகள் ச.ச.நிலையத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது அருமை நண்பர், 'மில்க்வைற்' அதிபர்
சிவநேயர் இ.தவகோபால் அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி தவகோபால் தேவராணி (தேவா)

அவர்கள் காலமான செய்திகேட்டு மிகவும் கவலையடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (7493)

உரிமையாளர்,
கோபிகா ஆடையகம்,
கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்.

## மரண அறிவித்தல்

### செல்வி கந்தவனம் தர்ஷிகா (தர்ஷி)

நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த செல்வி கந்தவனம் தர்ஷிகா (தர்ஷி) நேற்று (24.08.2002) சனிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் காலமானார்.

அன்னார் கந்தவனம் - தவமணிதேவி ஆகியோரின் அன்பு மகளும், க.சுதனன் (கொக்குவில் இந்து மாணவன்), க.அனுஷன் (பிரான்ஸ்), க.காயத்திரி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தங்கையும், திரு.திருமதி ஸ்ரீதரன் (பிரான்ஸ்), திரு.திருமதி கணேசமூர்த்தி (மல்லாகம்), திரு.திருமதி சோதிநாதன் (பிரான்ஸ்), திரு.திருமதி குமாரசுவாமி (கொக்குவில்), திரு.திருமதி இளவழகன்(நோர்வே) ஆகியோரின் மருமகளும், திரு.திருமதி ஞானசுந்தரம்(கொழும்பு), யோகச்செல்வன் (நவாலி), திரு.திருமதி சிவகுமார் (பிரான்ஸ்), திரு.திருமதி யோகதாசன் (கனடா) ஆகியோரின் பெறாமகளும் திருமதி நல்லையா, திருமதி கந்தசாமி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.08.2002)சனிக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலியார் கோவில் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (7505)

தகவல்:
ந.கந்தவனம்(தந்தை)
கவி போட்டோ உரிமையாளர்

# தனித்து வாழ்ந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எழுதுநராகப் பணிபுரிந்துவரும் அன்ரனீற்றா நிரஞ்சனி சிவஞானம் (வயது45) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து கூறப்படுவதாவது:-

திருமணமாகாத பிரஸ்தாப பெண தனதுவீட்டில் தனிமையில் வசித்து வந்தார். கடந்த புதன்கிழமை வேலைக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிய இவர், நேற்றுமுன்தினம் வேலைக்குச் சமுகமளிக்கவில்லை.

கடந்த இருதினங்களாக இவரது நடமாட்டம் இல்லாததை அடுத்து அயல்வீட்டுக்காரர் அவரது வீட்டுக்குச் சென்று பார்த்தனர்.

அங்கு துர்நாற்றம் வீசியதை அடுத்து வீட்டுக்குள் சென்று பார்த்த அயலவர்கள், அங்கு இரத்தம் பீரிட்ட நிலையில் நாக்கு வெளியே நீட்டியவாறு அவர் இறந்து கிடப்பதைக் கண்டனர்.

உடனடியாக பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. பொலீஸார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவனுக்கு தகவல் தெரிவித்தனர். அவர் சம்பவஇடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தின் கழுத்து, கைப்பகுதிகளில் கீறல் காயங்களும் உராய்வுக் காயங்களும் காணப்பட்டன. தலையின் பின்பகுதியில் பாரிய காயமும் காணப்பட்டது.

அவரின் உடலில் நகைகள் ஏதும் காணப்படவில்லை. ஒரு காதில் தோடு காணப்பட்டது. மற்றைய காதில் இருந்து தோட்டை பிடுங்க முயற்சித்ததில் அது சேதமான நிலையில் சடலத்துக்கு அருகில் கிடந்தது.

சடலம் மீட்கப்பட்ட அறையில் உள்ள கட்டிலில் உடுப்புக்கள் சிதறிக் காணப்பட்டன. உடுப்புகளுக்கு இடையில் இருந்து ஒரு சோடி காப்பு, 3 சங்கிலிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

அந்த அறையில் புத்தம் புது மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கரவண்டி ஒன்றும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட இந்தப்பெண்ணின் மரணம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான், பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்; பிரேதப் பரிசோதனை நடத்துமாறும் அவர் பணித்துள்ளார்.

பிரஸ்தாபப் பெண்ணின் சகோதரர்கள் வெளிநாட்டில் இருப்பதாகவும், தாயார் கொழும்பில் வசிப்பதாகவும், இதன்காரணமாக இவர் தனிமையில் வசித்துவந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-3-10-15-ரி)

## தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் மீதான தடையை நீக்குவதால் நாட்டுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாது. வன்செயல்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வந்துள்ள புலிகளை நாம் ஏற்கத்தான் வேண்டும்" என்று அவர் பீடாதிபதியிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய மாரப்பன, புலிகள் மீதான தடை உடன் நீக்கப்படும் என்று தெரிவித்தார். (ம-3-9)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, கடற்புலிகளின் தளபதிகளான லெப். கேணல் சிறீராம், லெப்.கேணல் ரஞ்சன் ஆகியோரும் இடம்பெற்றனர். கடற்போக்குவரத்தில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்தே நேற்றைய பேச்சில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் -

பேச்சுகள் முற்பகல் 10 மணி முதல் இரண்டு மணி நேரம் இடம்பெற்றதாகவும் - விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3-9)

# அமிர்தலிங்கத்தின் 75ஆவது பிறந்ததினம்

யாழ்ப்பாணம்,ஓக.25

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமான அமரர் அமிர்தலிங்கத்தின் 75ஆவது பிறந்த நாளான நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் யாழ். கூட்டணி அலுவலகத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டணி ஆதரவாளர்களும் இதில் பங்கேற்கவிருக்கின்றனர்.

அமரர் அமிர்தலிங்கம் பற்றிய இரு புத்தகங்கள் இன்று லண்டனில் வெளியிடப்படுகின்றன.

இந்த நிகழ்வில் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.(ம-3)

## நூல் அறிமுக விழா

எழுத்தாளர் தேவிபரமலிங்கத்தின் 'அணிதிரளும் சிறுஅலைகள்' என்னும் நூலின் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஈட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-3)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தில் ஈடுபட்டனர். 'கைது செய்த எங்கள் பிள்ளைகளை விடுதலை செய்', 'பொலீஸ் அராஜகம் ஒழிக!', '1983 ஆம் ஆண்டு முதல் நாம் பாதிக்கப்பட்டுவந்தது போதாதா?' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தரவேண்டும் என்றும் -

கடைகளைத் திறக்கக்கூடாது என்றும் அவர்கள் தெரிவித்ததையடுத்து நகரில் இருந்த தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. திருமலை சந்தையும் முற்றாகச் செயலிழந்தது.

நகரப்பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் இயல்பு நிலைமை பாதிக்கப்படவில்லை

'யுகதக' கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வில் ஏற்பட்ட தகராறை அடுத்து மூண்ட கலவரத்தால் 24 பேர் காயமடைந்ததும் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டமையும் தெரிந்ததே. (ம)

# பேச்சு குறித்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆகியன தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவே மிலிந்த மொறகொட நேற்று இந்தியா பயணமாகியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனிலும் நோர்வேயிலும் சந்தித்த சமயம் பேசப்பட்ட விடயங்கள் குறித்தும் அவர் இந்தியத் தலைவர்களுக்கு விளக்கம் அளிப்பார்.

நேரடிப் பேச்சுக்களுக்கு இந்தியாவின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அவர் கோருவார் எனத் தெரிகிறது.

இரு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்படும் பொருளாதார ஒத்துழைப்பு நடவடிக்கைகளின் அடுத்த கட்டம் பற்றியும் அவர் இந்தியத் தலைவர்களுடன் கூடி ஆராய்வார்.

புதுடில்லியில் அவர் தங்கியிருக்கும் நாள்களில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, இந்திய நிதி அமைச்சர் ஜஸ்வந்த் சிங், இந்தியாவின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் அக்மன் மொஜான், இந்திய பிரதமரின் கொள்கைத் திட்டமிடல் ஆலோசகர் ஜி. மிஸ்ரா, இந்தியப் பாதுகாப்புத்துறை ஆலோசகர் ஆகியோருடனும் அவர் கலந்துரையாடவுள்ளார்.

இந்தியாவுடன் இணைந்து தெற்காசிய பிராந்தியத்தின் நுழைவாயிலாக இலங்கையை உருவாக்குவது பற்றியும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் மேலும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளது.

இலங்கை அரசின் சார்பில் பொருளாதாரம், வங்கித்துறை, நிதி, விமானப் போக்குவரத்து, துறைமுகங்கள், காப்புறுதி உட்பட பல உடன்படிக்கைகளில் அமைச்சர் மிலிந்த மொறகொட கைச்சாத்திடவுள்ளார்.

தற்சமயம் இந்தியாவில் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமயப் பெரியார்களைச் சந்தித்து ஆசி பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவு என்றும் உள்ளது என்று பிரதமர் அங்கு செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். (ம-3-9)

## வெடிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அச்சமயம் அந்த வெடிபொருள் வெடித்ததாகவும் - கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் என்.தனுசா (வயது 8) என்பவரே உயிரிழந்தார். வி.மங்களசர்மா (வயது 3), வி.அகிலா (வயது 4), பி.வெள்ளையம்மா (வயது 48), கா.இராமசாமி (வயது 52) ஆகியோர் காயமடைந்தனர். (ம-3)

## குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கல்வியங்காடு, கோப்பாய் வரையுள்ள பகுதியில் 400 இணைப்புக்களும் - வழங்கப்படவிருக்கின்றன.

ஒரேநாளில் இந்த இணைப்புக்களை வழங்கக்கூடிய ஆளணி வசதி இல்லாததால் முதலில் பணம் கட்டுபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இணைப்புக்கள் வழங்கப்படவிருக்கின்றன.

பணம் செலுத்துபவர்களுக்கு ஒரு மாதகாலத்துக்குள் இணைப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்படும்.

2000ஆம் ஆண்டுக்கு முன்னர் இணைப்புக்கு விண்ணப்பித்துவிட்டு காத்திருப்போர் ரெலிகொம்மின் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பணத்தைச் செலுத்தலாம் - இப்படி அவர் தெரிவித்தார். (ம-3)


வாகனச் சாரதிகள் தேவை
கொழும்பில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கார், லொறிச் சாரதிகள் தேவை.
தகுதியானோர் தமது சாரதி அனுமதிப்பத்திரத்துடனும் கிராமசேவையாளரின் நற்சான்றிதழுடனும் 'உதயன்' பணிமனைக்கு இன்று காலை 9.00 மணிக்கு சமுகந்தரவும்.
☆ கொழும்பில் பணியாற்றிய முன்னனுபவமும், சிங்களம், ஆங்கிலத்தில் பேச்சுப் புலமையும் இருப்பின் விசேடமாகக் கவனிக்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிடவசதி உண்டு.
மனிதவள அலுவலர்
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/23[illegible])

வேலைக்கு ஆள் தேவை
சமையல் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
றிக்கோ ஹோட்டல்
270, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(7415)

நாளை ஆரம்பம்
பங்குடைமை
A/L 2003
DAY CLASS
முற்பகல் 11 மணி
D.M.I. யாழ்நகர்
குறிப்பு: திங்கள் முதல் வெள்ளி வரை 11 - 1மணி வரை.
(C/23287)

திருமறைக் கலாமன்றம் வழங்கும்
ஸ்பார்ட்டக்கஸ்
(நாடகம்)
(C/23585)
ஓகஸ்ட் 31 - செப். 1, 2002
(வெள், சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 6.45 மணி.

MURTHY
ADVERDISING SERVICE
2789
யாழ்.சேவையில் விளம்பரம் செய்ய விரும்புகிறீர்களா?
☆ பிறந்தநாள்
☆ வர்த்தக விளம்பரம்
☆ மரண அறிவித்தல்
எதுவானாலும் எமக்குப் போன் செய்யுங்கள்
யாழ். - கொழும்பு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவோம்
மூர்த்தி
அட்வர்டைஸிங் சேவிஸ்,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம். போன்:2789

அரசியல்
A/L 2003, 2004
ஆரம்பம்: 31-08-2002
காலை 9 மணி
ஆசிரியர்
பஞ்சாட்சரம்
D.M.I.
யாழ்.நகர்

உணவகம் ஒன்றில் சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை
தொடர்பு: ஈசன்
375, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்திக்கு அண்மையில்) (7499)

தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கு
தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு, யாழ். மண்ணில் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் பின்வரும் தலைப்புகளில் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்துள்ளது.
1. Enterprise Resource Planing (ERP)
(தகவல் தொழில்நுட்பமுடான நிறுவன வளத்திட்டமிடல்)
திரு.த.இரவிசங்கர் (தலைவர் TITA)
2. Bluetooth Technology
(குறுகிய தூர கம்பியில்லா தொழில்நுட்பம்)
திரு.உ.ஜெயதீபன் (நிதிப்பணிப்பாளர் TITA)
3. How to Prepare For a Management Career
(முகாமைத்துவப் பதவிக்கு ஒருவரை தயார்ப்படுத்துதல்)
திரு.நிமலன் கார்த்திகேயன் (ஆலோசகர் TITA)
இடம்:-குமாரசுவாமி மண்டபம், யாழ். இந்துக் கல்லூரி.
திகதி:-25-08-2002 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:-பிற்பகல் 4.00 மணி
அனுமதி இலவசம்
தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு
(TITA)
அனுசரணை:
யாழ்.இந்துக் கல்லூரி கணனிப் பிரிவு
(7501)

New Science College கன்னாதிட்டி.
2003 சடமும் கதிர்ப்பும் (RADIATION)
செவ். - 4-5 p.m., புதன்:- 5-6 p.m. ஆரம்பம்: 27-08-2002
2004 ஒளியியல் (LIGHT)
புதன் - 4.10-5.10 p.m., வெள்ளி:- 4.30-5.30 p.m.
ஆரம்பம்: 28.08.2002
By: R.Kugan (B.Sc.)
(7441)

STAR EDUCATION CENTRE
சுன்னாகம்
A/L 2003
பொருளியல்
P. மோகன் (B.B.A.Hons)
செவ், புதன், வியா.:-01-02. p.m.
ஆரம்பம்:- 27-08-2002
கல்வி உலகில் ஒரு தாரகை.
(7475)

இளமை மற்றும் அழகின் ரகசியம்

பயோட்டின்-H
உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...
தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்
Biotin-H ஆசிய நாட்டவரின் வாழ்க்கை சூழலுக்கேற்ப பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது.எனவே Biotin-H தலைமுடி உதிர்தலை முற்றாக தடுப்பதுடன் அடர்த்தியான கூந்தலுக்கும் வழிவகுக்கின்றது.
பயோட்டின்-H விஞ்ஞான சான்று பெற்றது பக்க விளைவுகள் இல்லை.
Biotin-H தற்போது இலங்கையில் எல்லா முன்னணி பார்மசிகளிலும் கிடைக்கப்பெறும்.
ARKEM : 470290 / 071-341956 E-MAIL : arkem@sltnet.lk

ஜோதிடம்
உள்நாட்டில், வெளிநாட்டில் பிறந்த உங்கள் குழந்தைகளின் ஜாதகம் திருப்பாகக் கணிக்க, விவாகம், தொழில், வெளிநாடு சம்பந்தமான பலாபலன்கள் அறிய, பொருத்தம் பார்க்க சுபகருமங்களுக்கு நாள் குறிக்க நாடுங்கள்:
சோதிடர் ஸ்ரீ. சிதம்பரநாதன்
புங்கடி கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு (புலோலி மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை அருகில்) (792)


## மரண அறிவித்தல்

### செல்வி அன்ரனிற் நிரஞ்சனி சிவஞானம்

(லிகிதர், யாழ். கல்வித்திணைக்களம்)

சுண்டுக்குளியைச் சேர்ந்த செல்வி அன்ரனிற் நிரஞ்சனி சிவஞானம் அவர்கள் நேற்று (24.08.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் சவிரியம்மா(ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதியினரின் அன்புமகளும், திருமதி நிலானி(கனடா), நிர்மலராஜ்(கனடா), திருமதி நிதினி சயஸ்(கனடா), நிதீஸ்வரன்(கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

30/1, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பே.ரட்ணராஜா
(7508)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.08.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.